# நெஞ்சுக்குள் நெருஞ்சி முள்!

## - அனுராதா ரமணன்



ஹாலில் பாபுராவைப் பார்த்ததுமே 'திக்'கென்றாகி விட்டது காயத்ரிக்கு.

இரும்பு பீரோவின் ஆளுயரக் கண்ணாடியில் பார்த்துப் பார்த்து அரை மணி - நேரமாய்த் தலை வாரிக்கொண்டிருந்த கணவன் பாலாஜியின் காதோடு சொல்கிறாள்:

''உங்க ஃபிரண்ட் வந்திருக்கார்...''

''யாரு... கிருஷ்ணனா...?''

''ஊம் ஹூம். பாபுராவ்!''

பாலாஜி, வெடுக்கென தலையை உதறிக்கொண்டு காயத்ரியைப் பார்க்கிறான். அத்தனை நேரம் பாடுபட்டு அடக்கிய கிராப் 'டம்'மென உயர்ந்து அடங்குகிறது.

''அவன் என் ஃபிரண்டா...? உன்னை... உன்னை என்ன செஞ்சாத் தேவலை?''

அவன், மனைவியின் மூக்கைத் திருக வர, அவள் அப்படியே பின்னுக்கு நகர்ந்து கட்டிலில் 'பொத்'தென விழ...

''ச்சீய்... விடுங்க. ஏற்கனவே உங்க ஃபிரண்டுக்கு - ஸாரி... உங்க ஆபீஸ் கிளார்க் பாபுவுக்கு கழுகுப் பார்வை... எங்கேயாவது ஸ்கிரீனுக்குப் பின்னாடி நின்னு பார்த்து வைக்கப்போறார்...''

காயத்ரி, புடவைத் தலைப்பால் கன்னத்தைத் துடைத்துக்கொண்ட அதே நேரத்தில் - கொஞ்சம்கூட நாசூக்கு நாகரீகமே தெரியாத கருணா - 'பொசுக்'கென உள்ளே நுழைகிறாள்!

''ஹாய்... உங்க அக்கா...''

காயத்ரி, கணவனிடம் ரகசியமாய்ச் சொல்ல ரொமான்ஸ் மூடிலிருந்து - பொறுப்பு மிக்க, பாசம் மிகுந்த தம்பியாக ஒரே வினாடியில் தன்னை மாற்றிக்கொண்டு திரும்ப...

கருணா - கடுகடுவென முகத்தை வைத்துக்கொண்டு நிற்கிறாள்.

காயத்ரிக்கு உடம்பு கூசிப் போகிறது...

இத்தனைக்கும் தவறு என்னமோ கருணாவின் மீதுதான்.

நாற்பது வயசுப் பெண்மணிக்கு, புருஷன் பெண்டாட்டி தனித்திருக்கும்போது அறிவிப்பில்லாமல் நுழைவது தவறு என்று தெரியாதா...?

கருணா - கருணாகரி எம்.ஏ.எம்.எட் - ஒரு பள்ளிக் கூடத்தின் மரியாதைக்குரிய தலைமையாசிரியை. கண்டிப்புக்கும், கறாருக்கும் பெயரெடுத்தவள். நாலு வருஷங்களுக்கு முன் கணவனை இழந்தவள். நல்ல வேளையாக குழந்தைகள் இல்லை. இருந்திருந்தால், அவை ரொம்பவும் சிரமப்பட்டிருக்கும்...

பாலாஜிக்கு, அக்காவிடம் பாசம் அதிகம். அக்காவிடம் மட்டுமில்லை, குடும்பத்தினரிடமே பற்றும், பிரியமும் நிறைய.

கல்யாணத்தின்போதே - அவன், காயத்ரியிடம் சொல்லிவிட்டான்:

''இங்கே பாரு... என்கூட என்னைப் பெத்தவங்க இருக்காங்க... என்னை வளர்த்த பாட்டி அம்மாவோட அம்மா இருக்கா... என்னோட ஒரே அக்காவும், அக்கா புருஷனும் உள்ளூரிலேயே இருக்காங்க... அவங்க அனேகமா, ராத்திரிக்கு ராத்திரி - படுத்துக்கதான் வீட்டுக்குப் போவாங்க. அக்கா புருஷனுக்கு சரியான உடம்பு இல்லே... டாக்டரும், மருந்துன்னும் நான்தான் ஓட வேண்டியிருக்கும்...

ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதம் காயத்ரி. நீதான் எல்லாரையும் அனுசரிச்சுட்டுப் போகணும். எங்க அம்மா, ஒரே ஆசாரம். நான் முழுக்க துளசி மாடத்தைச் சுத்தி, சாமி கிட்ட கண்ணை மூடிட்டு உட்கார்ந்து, மீதி நேரத்துல யார், என்ன தப்பு பண்ணினாங்கன்னு பார்க்கத்தான் அவளுக்கு சரியா இருக்கும்...

அப்பா ரொம்ப பிரஸ்டீஜ் பார்க்கறவர். சொந்த வீட்டுல கூட, 'சாப்பிட வாங்க', 'வாங்க'ன்னு, தன்னோட மாமியார் - அதான், என்னோட பாட்டி அழைக்கணும்னு விரும்புவாரு... இத்தனை வயசுக்கு மேல, மாப்பிள்ளை மரியாதை எதிர்பார்க்கிறவர்னு ஒரே வார்த்தையில சொல்லிடலாம்...

கருணா - எங்க அக்கா. குடும்பத்துக்கு ரொம்பச் செல்லம். நிறைய படிச்சிருக்காங்கற பெருமை வேற... யாரையும் அவளாே

அனுச்ரிச்கப் போக முடியாது... காதைக் கிட்ட கொண்டுவந்தா, ஒரு விஷயம் சொல்றேன்... கருணா ரொம்பவுமே ஒழுங்கு முறைய அனுசரிக்கறவ... புருஷன்காரன்கூட பொண்டாட்டி படுத்துக்கறதே 'இம்மாரல்'னு நினைக்கறவ.அவள்னா பார்த்துக்கோயேன்...

கடைசியா, எங்க பாட்டி. என்னோட ஃபிரண்ட், கெய்ட், ஃபிலாஸபர், டீச்சர், ஆயா - எல்லாம் அவங்கதான்... இந்தக் குடும்பத்துல இவங்ககிட்ட மட்டும்தான் நீ ஒரிஜினலா பேசி, சிரிக்கலாம். அரட்டை அடிக்கலாம்... இவங்க உயிரோட இருக்கற வரைக்கும் - எங்க எல்லாத் தனி வளையங்களுக்கும் ஒரு இணைப்பு வளையமா இருப்பாங்க.''

காயத்ரி, அத்தனையையும் மௌனமாய்க் கேட்டுக்கொண்டாள். அப்பொழுதே, அவளுள் பயம் - சின்னப் பொறியாய் விழுந்துவிட்டது.

கல்யாணத்துக்கே பயப்பட்டவள் அவள்... எத்தனை நாள் பெற்றவரிடம், தான் இப்படியே இருந்து விடுவதாகச் சொல்லிக் கெஞ்சியிருக்கிறாள்...

''எனக்கு, என்னமோ பயமா இருக்குப்பா... அந்தக் குடும்பத்துல இருக்கற ஒவ்வொருத்தரும் ஒரு மாதிரி... நான் எங்கேயாவது அகப்பட்டுப்பேனோன்னு...''

அப்பா, அவள் தலையை வருடிப் புன்னகைத்தார்.

''வீடுன்னு இருந்தா, ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமாத்தாம்மா இருப்பாங்க. நாமதான் எல்லாரையும் அனுசரிச்சுட்டுப் போகணும். மாப்பிள்ளை நல்லவர்தானே... அப்புறமென்ன...?''

அவளை மேற்கொண்டு பேசவே விடவில்லை, அவள் தந்தை சிற்சபேசன்.

இந்தக் கல்யாணத்தை நடத்தி வைக்க, அவர் பட்ட பாடு, நாய் பட்டிருக்காது.

இத்தனைக்கும் காயத்ரி ஒரே மகள்தான். சிற்சபேசனும் ஓரளவுக்கு வசதியானவர்தான்... அவள் அழகிலோ, புத்திசாலித்தனத்திலோ, யாராவது குறை சொன்னால் - சத்தியமாய் அவர்கள் ரசனையில்லாதவர்கள்...

அப்படியிருக்கையில் என்ன சிரமம்...?

ஏதோ ஒரு சிரமம்... எல்லாத் தகுதிகளும் உள்ள பெண்களுக்கு மாத்திரம் இந்த காலத்தில் சுலபமாய் மாப்பிள்ளை கிடைத்து விடுகிறானா என்ன...?

இத்தனை தகுதிகளும் இருப்பதே - அவளின் குறையாகிவிடுமே...! தாலியைக் கையில் எடுப்பவன் யோசிப்பானே...!

காயத்ரியின் விஷயத்தில் இதெல்லாவற்றையும் தாண்டி ஏதோ ஒரு இடறல்.

(இப்போதைக்கு அதைவிட்டு விடுவோம்... காயத்ரியே, இந்த வாழ்க்கையில் கொஞ்சம் கொஞ்ச மாக ஒன்ற ஆரம்பித்துவிட்டாள். இனிமேல் போய்க் கிளறுவது நாகரீகமாகாது. கதைக்கு வருவோம்...)

பாலாஜியும், சீதம்மா பாட்டியும் இருக்கிற வரையில் - காயத்ரியின் வண்டி, ஓடிக்கொண்டு தானிருக்கிறது.

கல்யாணமான இந்த நாலு வருஷத்தில் இந்தக் குடும்பத்தின் சுக துக்கங்களோடு ஐக்கியமாகி விட்டாள், காயத்ரி.

இத்தனைக்கும் - இவள் திருமணம் முடிந்த ஆறாம் மாதமே - கருணாவின் கணவர், ஒரேயடியாகக் கண்களை மூடிவிட்டார்.

அப்பொழுது, பாலாஜியின் தாய் பார்வதியே - 'வெடுக்'கெனச் சொல்லிவிட்டாள்.

''எல்லாம், வீட்டுக்கு வந்த பொண்ணோட ராசி... மருமக வந்ததைச் சொல்லவா... மாப்பிள்ளை போனதைச் சொல்லவா...''

காயத்ரி, கண்ணீர் மல்க சுவரோடு சாய்ந்து நின்று, மலங்க மலங்க விழித்தபோது, சீதம்மாதான் பார்வதியை அதட்டல் போட்டு அடக்கினாள்.

''இந்தா, வாய் புளிச்சதோ, மாங்கா புளிச்சதோன்னு வார்த்தையத் துப்பிடாதே...! லட்சம் வார்த்தையக் கொட்டலாம். ஆனா, ஒரு சொல்லை அள்ள முடியாது. உன் மாப்பிள்ளை என்னிக்கு ஆரோக்கியமா இருந்திருக்கான்... கல்யாணம் பண்ணின நாள்லேயிருந்து வியாதிதான். அதுக்கும் நேத்து வந்தவளுக்கும் முடிச்சுப் போடாதே!''

பார்வதி, தாயை உறுத்துப் பார்த்தாள்.

''உனக்கு பேரன் பெண்டாட்டி ஒசத்தியின்னா, அவளைத் தலைமேல வச்சுகிட்டுக் கூத்தாடேன்... யார் வேண்டாம்னு சொல்றாங்க...? நான், ஏதோ ஆத்தாமையில சொல்லிட்டுப் போறேன்...''

''ஆத்தாமையில சொன்னாலும், அளந்து சொல்லுங்கறேன். அதுவும் நம்ம வீட்டுப் பொண்ணுதான்... தாயில்லாப் பொண்ணும்கூட...''

கருணா, தனது குடித்தனத்தைக் கலைத்துவிட்டு, தம்பியுடனேயே தங்க வந்தபோதும் - இதே சீதம்மாதான், காயத்ரியைத் தனியே அழைத்துப்போய் - சில யோசனைகளைச் சொன்னாள்:

''நான் சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்காதே குழந்தை... எங்க காலத்துல அறுபது வயசுலப் புருஷனைப் பறிகொடுத்தாக்கூட, சில அசடுங்க, மத்த பொண்ணுங்க சந்தோஷமா இரு[illegible]க்கறதைப் பார்த்து வயித்தெரிச்சல் படும்... கருணாவுக்கு ரெண்டுங்கெட்டான் வயசுல இந்த நிலைமை வந்துடுச்சு... நீயும், பாலாஜியும்தான் பார்த்து, பதமா நடந்துக்கணும்...

ஏற்கனவே, அவளோட கோபம் லோகப்பிரசித்தம். போதாக்குறைக்கு துக்கப் பட்டிருக்கா... முணுக்முணுக்குன்னு ஆங்காரத்துல வார்த்தை, நெருப்பு மாதிரி தெறிக்க

விழுது...ஜாக்கிரதையாப் பேசும்மா...

புதுசாக் கல்யாணமாகி வந்த குழந்தையப் பார்த்து இந்த சொல்லை சொல்றதுக்குக் கூட கஷ்டமாத்தான் இருக்கு... ஆனா, என்னை விட்டா, இந்த வீட்டுல, இதையெல்லாம் பக்குவமா எடுத்துச் சொல்ல யாருமே இல்லே... அம்மாடீ... கருணா முன்னாலே தலை நிறையப் பூவை வச்சுக்காதேடா...! புருஷனோட சிரிச்சுப் பேசறதையெல்லாம், மறைவுல வச்சுக்க...! அவ கத்த ஆரம்பிச்சா, வீட்டையே நாறடிச்சிடுவா..."

காயத்ரி, அத்தனையையும் வேதவாக்காகத்தான் எடுத்துக் கொண்டாள்.

பூவைக் கிள்ளி, பின்னலுக்குள் மறைத்து செருகிக்கொண்டாள். கணவனைத் தன் விழிகளாலேயே ஸ்பரிசிக்க கற்றுக்கொண்டாள். அதிகமாய் சிரிக்காமல், தன் இதழ்களுக்கு விலங்கு மாட்டிக்கொண்டாள். இரவில் - தங்களது கட்டில் முணகல்கூட, கருணாவின் இதயத்தை வலிக்கச் செய்யுமோ என்கிற பதற்றத்தில் - உணர்ச்சிககளைக் கூட அடக்கி வாசிக்க தெரிந்துகொண்டாள்...

அப்படியும் - வயிற்றில் வளரும் குழந்தையை மறைக்க முடியவில்லையே!

அப்பொழுதெல்லாம் - வீடு தாள் பறக்கும்! கருணாவிற்கு யார் மீது, என்ன கோபம் என்றே தெரியாது... 'படபட'வெனபொரிந்து தள்ளுவாள்.

பார்வதி அப்படியே மகளின் முகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி!

மகள் எரிந்து விழுகிற நபர் மீது, அவளும் இரண்டு மடங்காக எரிச்சல் படுவாள்.

போதாக்குறைக்கு - கருவுற்ற நாளிலிருந்தே - காயத்ரி பேயறைந்தாற் போல இருந்தாள்... அடிக்கடி மயக்கம் போட்டு விடுவாள். மாமியாரும், நாத்தியும் பேசும் பேச்சுக்கள், அவளைக் கதிகலங்கச் செய்யும்...

அப்பொழுதும் சீதம்மாதான், காயத்ரியைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்.

"இந்தா, ஏற்கனவே அவ பயந்த சுபாவமுடையவ. உங்களோட சண்டையும், கூச்சலும், அவ கர்ப்பத்தையே கலங்கடிச்சிடும் போல இருக்கு... பிரசவம் நல்லபடியா முடியற மட்டும், அவ பொறந்த வீட்டுலேயே இருந்துட்டு வரட்டும்..."

பார்வதியாகட்டும், கருணாவாகட்டும்... ஏன், வீட்டின் எசமானர், பெரிய மனிதரான நாராயணன் தானாகட்டும்... கத்துவதை எல்லாம் கத்திவிட்டுக் கடைசியில் 'சீதம்மா சொல்வதில்தான் நியாயம் இருக்குமோ' என்று யோசிப்பார்கள்...

காயத்ரியும் இந்தக் குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டு இரண்டு ஆண் குழந்தைகளுக்குத்தாயாகிவிட்டாள். மூத்தவன் வருண்... மூன்று வயதாகிறது. இளையவன் நரேந்திரன்... இன்னும் ஒரு வயசு முடியவில்லை..

பாலாஜிக்கு ஒரேயொரு குறை... காயத்ரி, அவளைப் போல அழகும் பண்பும் நிறைந்த ஒரு மகளைப் பெற்றுக்கொடுக்கவில்லையே என்று...

காயத்ரி மட்டும் - 'மகள்' பேச்சை எடுத்தாலே முகம் வாடிப் போவாள். அல்லது அந்தப் பேச்சை அப்படியே துண்டிக்கப் பார்ப்பாள்; திசை திருப்ப முயற்சிப்பாள்.

"பொண்ணு என்ன பொண்ணு... நாங்கள்ளாம் படற பாடு போறாதா?"

"நீ என்ன கஷ்டப் பட்டுட்டே காயத்ரீ... பெரிய கிழவி மாதிரிப் பேசறியே...! உன்னை மாதிரி எல்லாருக்கும் வாழ்க்கை அமைஞ்சா போதாதா...? இன்னிக்கு கூட, எங்க ஆபீஸ் மானேஜர் சொன்னார்..."

பாலாஜி, இதைச் சொல்லிவிட்டுக் குறுகுறுவென அவளைப் பார்ப்பான்.

"என்ன சொன்னார்... இந்த மாதிரி ஒரு பிள்ளை எனக்கில்லை யேன்னா...?"

"அப்படி சொல்லியிருந்தாத்தான் 'உன் தேவலையே...! கல்யாணத்துக்கு முன்னாலேயே, நான் - இந்த பிராஞ்சுக்கு மாத்தலாகி வராமப் போயிட்டேனே பாலாஜி... வந்திருந்தா, உன்னை, முதல்லே என் மாப்பிள்ளையா வளைச்சுப் போட்டுட்டிருப்பேனே'ன்னு... எத்தனை தடவை சொல்லிட்டார் தெரியுமோ?"

"ஓஹோ!"

"அதுல என்ன பெரிய விசேஷம்னா, அவரோட எந்தப் பொண்ணுக்கும் இதுவரைக்கும் கல்யாணமே ஆகல்லையாம்... ஆபீஸ்லே என்னைப் பார்த்துப் பார்த்து... அவர் விடற பெருமூச்சுனால... என் டேபிள்மேல இருக்கற பேப்பர்ஸ் எல்லாம் பறக்கறதுன்னா, பார்த்துக் கோயேன்..."

காயத்ரிக்கு சிரிப்பு வரும். இருந்தாலும் அடக்கிக்கொண்டு - கோபிப்பது போல முகத்தைத் தூக்கி வைத்துக்கொள்வாள்.

அதற்கே, அவன் துடித்துப் போய் விடுவான்.

"இதுக்குத்தான்... இதுக்குத்தான் சொல்றேன்... ஒரு பொண்குழந்தையப் பெத்துக்கொடுன்னு..."

"இதுக்கும், அதுக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்கே... பொண்ணைப் பெத்துட்டா, ஒரு ஆம்பிளை மூஞ்சியில பொறுப்புணர்ச்சி வரும்... கன்னா பின்னான்னு கேன்டீன்லே செலவழிக்கத் தோணாது... பொண்ணைப் பெத்துருக்கானே. இப்பவே சிக்கனமா இருந்தாத்தானே நாலு காசு சேர்க்கலாம்... சிக்கன நினைப்பு வந்ததுமே, விலைவாசியப் பத்தின கவலை வரும்... கவலை, ஒரு மனுஷனோட முகத்துல ரேகை போடும்... முன் நெத்தியில லேசா வழுக்கை விழச் செய்...

காதோரத்துல நாலஞ்சு நரைச்ச முடி - 'பவுன் விலை ஏறுதுடா... மார்க்கெட்லே இஞ்ஜினியர், டாக்டர், வரன் விலையெல்லாம் எக்கச்சக்கமா ஏறிப் போச்சுடா'ன்னு ரகசியம் பேசும்... அப்ப, என்னைப் பார்க்கற மானேஜர், இப்படி ஏங்கி சாக மாட்டாரில்லே...''

காயத்ரி சிரிப்பாள். ஆயினும், மற்ற நேரங்களில் சிரிப்பது போலில்லாமல் - இந்தசமயத்தில் மட்டும் ஒரு உயிரற்ற சிரிப்பை உதிர்ப்பாள்.

'கொஞ்சம் இருங்க. அடுப்புல பால் பொங்கி வழியறவாசனை வர்றாப்பல இருக்கு... போய் பார்த்துட்டு வந்துடறேன்...'

'அம்மாகூப்பிடறாப்பல இல்லே? கைய விடுங்க...'

'ஐயோ, உங்க அக்கா, புடவைய லாண்டிரியில கொடுக்கச் சொல்லிட்டுப் போனாங்க... நான், மறந்தே போயிட்டேன்...'

பாலாஜி, முகவாயை ஒரு கையால் தடவியபடி அவளையே பார்த்துக் கொண்டு நிற்பான்.

'பெண்ணாகப் பிறந்த இவளுக்கே - பெண் குலத்தைக் கண்டால் இத்தனை வெறுப்பா?'

'வெறுப்பா...? பயமா...?'

'பயமாகத்தான் இருக்கும். பெண்ணைப் பெற்றால் பொறுப்பைச் சுமக்க வேண்டியிருக்கும். இப்பொழுது போல குழந்தையாய் வளைய வர முடியாது என்கிற பயம்தான் காரணமாக இருக்கும்.'

ஒருமுறை - அவர்களிருவரின் மிக அந்தரங்கமான வேளையில் சந்தோஷமான நேரத்தில், அவன் - அவளது கன்னத்தில் முத்தமிட்டபடியே சொன்னான்.

''காயத்ரீ...''

''உம்...?''

''இந்த முத்தம் உனக்கு...''

''.....''

''இது வருணுக்கு...''

''அவனுக்கு கொடுக்க வேண்டியதை, அவன் கன்னத்துலேயே கொடுக்கறது. நான் எதுக்கு நடுவுல...?''

''சேச்சே... குறுக்கே பேசாதே! குழந்தைகளுக்கு அப்பா மூலமா முத்தம் போறதைவிட, அம்மா மூலமாபட்டுவாடாசெய்யறதுலதான் சுவாரஸ்யம் அதிகம்!''

''சரிதான்...''

''இது வந்து.. உன் வயித்துல இருக்கற என் பெண்ணுக்கு!''

அவன், அவளது வயிற்றில் முத்தமிட - அவள் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்துவிட்டாள்.

''என்னங்க...''

''என்ன...?''

''என் வயித்துல வளர்றது பொண்ணுன்னா சொல்றீங்க...''

''ஏன்... பொண்ணா இருந்தாஎன்ன காயத்ரீ... ஆஸ்திக்கு ஒரு பிள்ளை இருக்கு... ஆசைக்கு ஒரு பொண்ணு வேண்டாமா...''

''வேண்டாங்க... எனக்குப் பொண்ணு வேண்டாம்...''

அவள், அவனது மார்பில் முகம் புதைத்து அழுதாள்.

நல்ல வேளை. அடுத்ததும் ஆண் குழந்தையாகப் பிறந்தது - காயத்ரி மறுபடியும் சிரித்தாள்...

பிள்ளை பெற்ற அன்றே, கணவனிடம் - கருத்தடை ஆபரேஷனுக்கும் அனுமதி வாங்கிவிட்டாள்....

''ரெண்டே போதும்... இதுங்களையே நான் எப்படி சமாளிக்கப் போறேனோ தெரியலை...''

''நம்ம நாட்டை உத்தேசிச்சு, ரெண்டு குழந்தை போதும்கறதை நானும் ஒத்துக்கறேன் காயத்ரீ... ஆனா கடைசியில எனக்கு ஒரு பொண்ணைப் பெத்துக்கொடுக்காமலேயே ஏமாத்திட்டே...''

''ஒவ்வொருத்தர் பொண்ணா பொண்ணான்னு அலர்றாங்க... உங்களுக்கென்ன பொண் குழந்தை மேல இவ்வளவு ஆசை...?''

''வம்சத்துக்கு ஒரு பொண்ணு வேணும் காயத்ரீ... யோசிச்சுப் பாரேன்... எங்க பாட்டியோட காரியமும், பழகற சுபாவமும் எங்க அம்மாவுக்கும் கிடையாது... கருணாவுக்கும் கிடையாது... எனக்குப் பொறக்கற பொண்ணாவது - என் பாட்டி பேரைச் சொல்ற மாதிரி வளரணும்னு நான் ஆசைப்படறதுல என்ன தப்பு...''

''விஷப் பரீட்சை என்னத்துக்கு... குழந்தை, உங்க பாட்டிய கொள்ளாம, அதோட பாட்டியக் கொண்டுப் பொறந்துடுச்சுன்னா... இன்னும் ரொம்பக் கஷ்டமில்லையா... ப்ளீஸ்... நமக்குப் பொண்ணே வேண்டாங்க...''

காயத்ரியைப் புரிந்துகொள்ள முடியாமல், இன்றளவும் பாலாஜியும் திண்டாடுவது இந்த ஒரு விஷயத்தில்தான்.

மற்றபடி - அவளைப் போல ஒரு மனைவி கிடைப்பது அபூர்வம்...

அனேகமாய் இருவர் கருத்தும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.

பாலாஜியின் அலுவலக நண்பர்கள் வீட்டுக்கு ஒரு முறை வந்தால் போதும். அவர்களைப் பற்றிய துல்லியமான கணிப்பை, அன்றிரவே அவனிடம் சொல்லிவிடுவாள் அவள்...

''அவர்தான் கிருஷ்ணனா... பார்த்தா பாவமாயிருக்கு. குடும்பப் பொறுப்பு ஜாஸ்தியோ?''

''எப்படிக் கண்டுபிடிச்சே?''

''கொண்டு வந்து வச்ச காபி, டிபனை வேண்டாம்னு சொல்லாம, வாங்கி, சுத்தமா காலி பண்ணிட்டாரே... அதனாலதான் கேட்டேன்... இதுவே, அந்தரகுராமன் தட்டுல பாதி மிக்சர் மீதி... காபி தாராளமா ஒரு மடக்கு தம்ளர்லேயே... கல்யாணமாகாத தனிக்கட்டையின்னு நல்லாத் தெரியுதே...''

பாலாஜி, பெருமையுடன் காயத்ரியின் கன்னத்தை தட்டுவான். அதே மாதிரிதான் - இதோ, இந்த பாபுராவையும், பார்த்தவுடனேயே சொல்லிவிட்டாள்.

''மகா வம்பு போல இருக்கே...''

''என்... என்ன சொன்னான்...?''

''என்கிட்ட ஒண்ணும் பேசலை. உங்க அம்மாகிட்டயும், அக்காகிட்டயும், உங்க ஆபீஸ்லே ஸ்டெனோவா இருக்கற பொண்ணு எவன் கூடவோ ஓடின விஷயத்தை கண், மூக்கு, காது வச்சு, விரிவா சொல்லிண்டிருக்கார்...''

''அவன்எப்பவுமே இப்படித்தான். ஊரார் விஷயத்தை மெல்லறதுன்னா - அவனுக்கு வெல்லக்கட்டி சாப்பிடற மாதிரி... அதுவும் கருணாவுக்கும், அம்மாவுக்கும் இவன் வந்துட்டா - வேற ஒரு வேலையும் ஓடாது. ஊர் உலகத்துல இருக்கற வம்பை யெல்லாம் மூட்டை கட்டிட்டு வந்து கொட்டிட்டு, அம்பது, நூறுன்னு கடனைவாங்கிட்டுப்போவான்... நான் இல்லேன்னு சொன்னா, அம்மாவோ கருணா அக்காவோ அவன் மேல பரிதாபப்பட்டு பணத்தைத் தூக்கிக் கொடுப்பாங்க...''

''அப்படியொண்ணும் பெரிய குடும்பம் இல்லே போல இருக்கு... என்னதான் செலவோ...!''

காயத்ரிவியந்து கொள்வாள்.

இப்பொழுதும் அவன் இது மாதிரியான ஒரு செய்தியைக்கொண்டு வந்து, வாரித் தெளித்துவிட்டு - பணத்துக்குத்தான் அடி போடுகிறான்...

''பாலாஜிய எங்கே இன்னும் காணோம்...''

கருணா, இதற்குப் பதில் சொல்வதற்குள்பாலாஜியே வெளியில் வந்துவிட்டான்.



''வாடா... என்ன இன்னிக்கு விடிகாலையிலேயே வம்பா...''

''சேச்சே... எனக்கென்ன... வேற வேலையில்லேன்னு நினைச் சிட்டிருக்கியா... இன்னிக்கு நான் அவசரமா திருச்சிக்குப் போறேன்டா... கையில நூறு ரூபா உதைக்கறது... மாசக் கடைசியிலக் கூட, மகாலட்சுமி தங்கற இடம் இதானே... அதான்...''

''இந்த கப்ஸாதானே வேண்டாங் கறது... திருச்சி மதுரையின்னு எதையாவது சொல்லிட்டு, பெங்களூர் ரேசுக்குப் போறே... அதானே...''

பாபுராவின் முகம் கறுத்துவிட்டது...

பாலாஜிக்கு, இவனது குணம் பிடிக்காதுதான். இருந்தாலும், இப்படி முகத்துக்கெதிரிலேயே... அதுவும் கருணாவையும், பார்வதியையும் வைத்துக்கொண்டு அட, அதோ பின்னால் காயத்ரியும் நிற்கிறாளே...

இப்படி மூன்று பெண்களை வைத்துக்கொண்டு பேசக்கூடிய பேச்சா இது?

பாபுராவ், மனசுக்குள் கறுவிக்கொள்கிறான்...

'இருக்கட்டும்டா... உன்னை அப்புறமா கவனிச்சுக்கறேன்...'

மனசுக்குள் இப்படி நினைத்தாலும், வாய் என்னவோ குழைந்து குழைந்துதான் வார்த்தைகளை அடுக்குகிறது...

''ஏண்டா... ஏதோ ஒரு தடவை - ரேசன்னா எப்படியிருக்கும்னு வேடிக்கைபார்க்கறதுக்காகப் போனா அதையே குத்திக்குத்திக் காமிக்கறதா... அம்மாவும் அக்காவும் என்னை என்னன்னு நினைப்பாங்க... அவங்க உனக்கு மாத்திரம் அம்மா, அக்கா இல்லேடா... உன்னோட அம்மாவை எனக்கும் அம்மாவா நினைக்கறேன்... உன்னோட அக்காவை என்னோட ஸிஸ்டரா நினைக்கறேன்...''

பாலாஜி, சிரித்தபடி கையமர்த்துகிறான்.

''இதோட நிறுத்திக்க... இதுக்கு மேலப் போனா அசிங்கமாப் போயிடும்... ஆமா... திருச்சியில என்ன வேலை...?''

''அங்கே, பொன்மலையில ஒரு அநாதை ஆசிரமம் இருக்குடா... என் தங்கை ஒருத்தி - அந்த ஆசிரமத்துல வார்டனா இருக்கா...''

காயத்ரி, தேள்கொட்டியவள்போல நிமிருகிறாள்... 'சட்'டெனக்கண்களை இருட்டிக்கொண்டு வருகிறது...

''அவ ரொம்ப சாதுடா... எந்த வம்புதும்புக்கும் போகமாட்டா...''

''அதாவது உன்னை மாதிரி...''

''அட அப்படித்தான் வச்சுக்க... நான் யார் வம்புக்குப் போறேன்... ஏதோ, நம்ம வீட்டுலதான் இத்தனை உரிமை எடுத்துட்டுப் பேசறேனே தவிர... பாருங்கம்மா...''

அவன், தன் கட்சிக்கு பார்வதியையும் இழுக்க, அவள் கரைகடந்தபரிவுடன் சொல்கிறாள்.

''அவன் கிடக்கான் பாபுராவ்... நீ சொல்லு...''

''பார்த்தியா... பெரியவங்களுக்கு என்னைப்பத்தி நல்லாவே தெரியும்... அம்மா... என் அப்பாவித் தங்கை மேல - வேண்டாதவங்க சிலர் இல்லாததும் பொல்லாததுமாப் பழி சுமத்தியிருக்காங்க... அவ, ஒரேயடியா பயந்துபோய், எனக்கு லெட்டர் எழுதியிருக்கா... போய் பார்த்து, என்ன, ஏதுன்னு விசாரிக்க வேண்டியது ஒரு அண்ணனோட கடமை இல்லையா...''

கருணா, அவசரமாய் தன் கைப்பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து, பாபுராவின் கையில் திணிக்கிறாள்.

''உன்னை மாதிரி ஒரு பொறுப்புணர்ச்சி எல்லாருக்கும் வராது பாபு... எங்க வீட்டுலேயும் எனக்கு தம்பியின்னு ஒண்ணு இருக்கே... 'ரிப்பேருக்கு கொடுத்திருக்கற ரிஸ்ட் வாட்ச்சை வாங்கிட்டு வாடா'ன்னு இதோட நாப்பது தடவையாவது சொல்லியிருப்பேன்... எங்கே, அவனவனுக்கு, பெண்டாட்டி, குழந்தைங்கள கவனிக்கத்தானே நேரம் சரியா இருக்கு...''

அவள் பேசி முடிப்பதற்கும் - பாலாஜியின் முதுகுப் புறத்தில் நின்றிருந்த காயத்ரி, தடாலென மயங்கி விழுவதற்கும் சரியாக இருக்கிறது.

''காயத்ரீ!!!''

பாலாஜி, பதறிப் போகிறான்.




சமையலறையிலிருந்து சர்க்கரைப் பொங்கலின் மணம், வீட்டையே தூக்குகிறது.

சிற்சபேசன், பூஜையறையில், இரு கை கூப்பி, கண்மூடி அமர்ந்திருக்கிறார். மூடிய இமைகளையும் மீறி கண்ணீர், கன்னங்களில் கோடு போடுகிறது...

'உலகத்துல எந்த ஜீவனும் - எந்த விதக் குறிக்கோளும் இல்லாத வெத்துப் பிறவியா பிறக்கறதில்லே. நீ படைச்ச செடி, கொடி, காய், கனி, புல், பூண்டு, ஏன், புழுவுக்குகூட பூமியில பிறக்கறதுக்கு ஒரு அர்த்தம் உண்டு... என் மகளோட பால்ய வயசுல, அவ வயித்துல விழுந்த விதை - இன்னிக்கு சின்னஞ்சிறு செடியா தழைச்சு நிக்கறதே... அதை எதுக்காகப்பா சிருஷ்டிச்சே... அந்த சிருஷ்டியோட ரகசியம் என்ன...'

'ஒரு கருப்பையில ஜனிச்சுட்டோமேன்னு பிறந்து, பிறந்துட்டோமேன்னு வளர்ந்து... நாளைக்கு - இந்த நாட்டுலதான் எந்த விதமா உருவாவோம்... யாருடைய மனைவியா, யார் வீட்டுக்கு மருமகளாப் போவோம் என்கிற கவலையே இல்லாத அந்த சிட்டுக்குருவிக்கு நீ என்ன வழி காட்டப்போறே...'

அவர் கண்களைத் திறந்து - எதிரே பூஜை மண்டபத்தில் வீற்றிருந்த அம்மனை, உற்றுப் பார்க்கிறார்...

'அம்மன் அழகாத்தானிருக்கா... சசியைப் போல.'

மனக் கண்முன், சின்ன யூனிஃபார்ம் குடையாய் விரிய - காற்றில் மிதந்து வரும் செண்பகமலர் போல ஆடி வரும் ஆறு வயதுச் சிறுமியை நிறுத்திப் பார்க்கிறார்...

குழந்தைக்கு சுட்டியும், ஜிமிக்கியும் போட்டு நத்தும், புல்லாக்கும் மாட்டி, பட்டுப் பாவாடையைக் கட்டி உட்கார வைத்தால் - அம்மன்தான்...

சிற்சபேசனுக்கு அம்பிகை எப்படியிருப்பாள் என்று தெரியாது. ஆனால் - தன் பேத்தி சசியைவிடவும் - அந்த தெய்வம் அப்படியொன்றும் பிரமாத ரூபவதியாக இருக்காது என்கிற எண்ணம் உண்டு.

சசியைப் பற்றி நினைக்க ஆரம்பித்தால், அவருக்கு நேரம், காலம் தெரியாது...

அந்தக் குழந்தைக்காகவாவது தான் பல வருஷங்கள் தெம்பும் திடமுமாய் வாழ வேண்டும் என்றுதான் கடவுளை வேண்டுவார்...

இப்போதுகூட அதைத்தான் பிரார்த்திக்கிறார்... தவறு... தெய்வத்திடம் மானசீகமாய் சண்டை போடுகிறார்...

'இதப்பாரு... என் குழந்தை காயத்ரி அப்பாவி. ஒண்ணுமே தெரியாத சிறுசு. அவளுக்கு நீ எங்கோ கவனமா இப்படியொரு தண்டனையைக் கொடுத்துட்டே. அதுக்குப் பரிகாரமா - என்னை ஆயுசோட வச்சு, எந்த ரகசியமும் வெளியில வராதபடி செய்ய வேண்டியது உன் கடமை - டியூட்டி. தெரிஞ்சுக்க... கடவுளுக்கே கவனக் குறைவு ஏற்பட்டா, கேவலம் மனுஷங்க நாங்க என்ன பண்ணுவோம்... சொல்லு..'

இன்னும்கூட அவர் அங்கேயே உட்கார்ந்திருப்பார். தவசிப்பிள்ளை சாமாதான் குரல் கொடுக்கிறார்...

''பொங்கல் ரெடி... சாமிக்குப் படைக்கக் கொண்டு வரட்டுமா?''

''ஆகா. கொண்டாயேன். தப்பு செஞ்ச குழந்தையோட முதுகுல நாலு அடியையும் வச்சுட்டு, பின்னோட மனசு தாளாம, அதுங் கையில நாலு சாக்லேட்டையும் வைக்கறாப்பல... இப்பத்தான் ஒரு பாட்டம் தெய்வத்தை திட்டினேன். நீ பொங்கலைக் கொண்டா,... ரெண்டு பேருமா சேர்ந்து சமாதானப் படுத்துவோம் சாமிய...''

சாமா, கண்களை மேல் துண்டால் ஒற்றியபடியே, சமையலறைக்குள் ஓடுகிறார்.

சாமாவுக்கு வயசு அறுபதாகிறது. சிற்சபேசன் இவரை விடவும் வயது நாலைந்து சின்னவராயிருப்பார்...

சாமாவின் கையில் அந்த வீட்டுக் கரண்டி ஏறியே முப்பத்தியைந்து வருடங்களுக்கு மேலாகிறதே!

அவர் வந்து குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு - ஒரு ஐந்தாறு வருஷங்களுக்குப் பிறகு - சிற்சபேசனுக்கு கல்யாணமாயிற்று...

அதற்கும் பின் - பல வருஷங்கள் தவமிருந்து பிறந்த குழந்தைதான் காயத்ரி.

தன் பெண்ணின் வாழ்க்கை பிற்காலத்தில் என்னமாய் சிரிப[...] போகிறது என்பதை முன் கூட்டிே[...] அறிந்துதானோ என்னவோ பெற்றவள் - மகளின் முதல் பிறந்[...] நாளைக் கூடப் பாராமல் க[...] மூடினாள்...

நடுவில் சாமாவுக்[...] கல்யாணமாகி, பொண்டாட்[...] காரிக்கு - சமையற்காரப் புருஷன் -[...] அழகுக்கும் புத்திசாலித்தனத்துக்[...] ரொம்பவும் மட்டம் என்று கா[...] கடந்து புத்தியில் உறைத்து, ஓ[...] போய்விட்டாள்.

இப்போது சாமா[...] கேட்டாலும் - இப்படித்[...] சொல்லுவார்:

''சனியன் தொலைஞ்சது[...] நிம்மதியா இருக்கேன். எ[...] கிளறாதீங்கோ... ஏதோ ஜாதியில பொறந்[...]

எப்படியோ ஆளானேன்... என்னைப் பெத்தவா - என்னை வளர்த்த லட்சணத்துக்கு, மனுஷனா உருவாகியிருக்கேனே... அதை நினைச்சு, சந்தோஷப்படத் தெரியாத பொம்மனாட்டி இருந்தாத்தான் என்ன, போனா என்ன சுவாமீ...''

பொங்கிப் பொங்கிக் காளவாயாய் கொதித்த அவரது நெஞ்சுக்கு - காயத்ரி ஒரு மலையத்தனை ஆறுதல்... அதுவும், குழந்தை, தாயை இழந்த பின் ஏகப்பட்ட வாஞ்சை...

இன்னும் பார்க்கப் போனால் - சிற்சபேசனுக்கும் சாமாவுக்கும் எட்டாம் பொருத்தம்...

பல சமயங்களில் அல்ப விஷயங்களுக்கெல்லாம் இருவரிடையேயும் தகராறு முற்றி இனிமேல் இருவரும், ஒருவரையொருவர் பார்த்துக்கொள்வது கூட மகா பாவம் என்பது போல முறைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

சிற்சபேசன், அன்று வரையில் அவருக்கு கொடுக்க வேண்டிய சம்பள பாக்கியை, பைசா விடாமல் கணக்குப் பார்த்து விட்டெறிவார்.

இவர் 'ஹூம்' - என்று அலட்சியமாய் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பி விடுவார்...

''ஒரு வயசுக்கு மேல நாக்கைக் கட்டுப்படுத்தணும்... எதுல பாரு, காரம் இல்லே, உப்பு இல்லேன்னு புலம்ப வேண்டியது. அப்புறம் ஒரேயடியாப் படுத்து பூலோகத்துக்கும் எமலோகத்துக்கும் லிப்ட்லே போயிட்டு போயிட்டு வர வேண்டியது... உமக்கு சமைச்சுப் போட என்னால முடியாது... பேசாம ரெண்டாந்தாரம் கட்டும்... நான் வர்றேன்...''

''போயேன்... எங்கே போயிடறேன்னு நானும் பார்த்துட்றேன். நேத்திக்கு பீன்ஸ் பொரியல்லே ஒரே கொட்டாங்குச்சி... தேங்காய அப்படியா துருவுவான் ஒரு மனுஷன்?''

''நாப்பது வயசுக்கு மேல தேங்கா என்ன வேண்டிக் கிடக்குன்னேன்? டாக்டர் என்ன சொன்னார்... கொழுப்பு சம்பந்தப்பட்டது எதுவுமே கூடாதுன்னார்... அப்போ - ரொம்ப மிதப்பா, 'அதெல்லாத்தையும் சாமாகிட்ட சொல்லுங்க'ன்னு என் பக்கம் கையைக் காட்டி விட்டீர்... இப்ப டாக்டருக்கு யாரு பதில் சொல்றது...''

''இந்தா... பேச்சை ஓட்டாதே. நானே சமைச்சுக்கறேன்... என் உடம்பு... எனக்கு எப்படி பார்த்துக்கணும்னு தெரியும்... ஒரு நிமிஷம்... இடத்தைக் காலி பண்ணு...''

சாமா, ரோஷத்தில் இரண்டு நாட்கள் - தலைமறைவாய் இருப்பார். மூன்றாவது நாள் - காயத்ரியை பார்க்காமல் சோறு வேண்டியிருக்காது...

'என்ன எழவுடா இது... இத்தனைக்கும் சொந்தமில்லே... ஏக ஜாதிகூட இல்லே... இதுங்கிட்டப் போய் இத்தனைப் பாசத்தை



வச்சுட்டேனே...'

அவர், தனக்குள் அலுத்தபடி, முன்னாய் அடர்ந்த கன்னத்தைச் சொறிந்தபடி, ஒரு கையில் டிரங்க் பெட்டியும், இன்னொரு கையில் படுக்கையுமாகத் திரும்புவார்.

அதற்கேற்றாற்போல, சிற்சபேசனும் சோற்றைப் பிசைந்து, கிண்ணத்தில் வைத்துக்கொண்டு, காயத்ரியின் ஓட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருப்பார்...

சாமாவைப் பார்த்ததும் குழந்தை, ஏரோப்ளேன் மாதிரி கைகளை விரித்துக்கொண்டு ஓடி வரும்...

சிற்சபேசனின் கையிலிருக்கும் கிண்ணத்தை 'வெடுக்'கெனப் பிடுங்கிக்கொள்வார் சாமா...

''என்னய்யா சோறு இது... பருக்கை ஒவ்வொண்ணும் ஈட்டியா விறைச்சுண்டு நிக்கறது... குழந்தைக்கு ஜீரணமாறது இருக்கட்டும். முதல்லே உமக்கு ஒத்துக்குமா... நீர் கட்டையை நீட்டிட்டா, குழந்தை கதி என்ன... கருமம்... கருமம்...''

சிற்சபேசனும் தன் கௌரவத்தை விட்டுக்கொடுக்கக் கூடாதென்பதற்காக முகத்தை ஒரு முழ உயரத்துக்கு தூக்கி வைத்துக்கொள்வார்.

எல்லாம் கொஞ்ச நேரம்தான்.

அன்று மாலையே சாமாவும், அவருமாய் திருச்சி தெப்பகுளத்தைச் சுற்றி, காய்கறி வாங்கிக் கொண்டிருப்பார்கள். சிற்சபேசன், வாக்கிங் ஸ்டிக்கை அழுந்த ஊன்றி, நெஞ்சை நிமிர்த்தி நடப்பார்.

சாமா, ஒரு கையில் பையும் - இன்னொரு கையில் காயத்ரியுமாய், விசுக் விசுக்கென, அவரது பின்னாலேயே ஓடுவார்...

பல சமயங்களில் காயத்ரி - அவரது தோள் மீதுதான் சவாரி செய்வாள்...

- அப்போது இருவரும் இழைவதைப் பார்க்க வேண்டும். எசமானர் - சமையற்காரர் என்கிற பேதமெல்லாம் இருக்காது.

''பிஞ்சுப் புடலங்கா இருக்கு... வாங்குங்கோ... உங்களுக்குத்தான் பொரிச்ச குழம்பு பிடிக்குமே...''

''புடலங்காய்க்கு என்ன... எப்பவும் கிடைக்கும். அங்கே மெது பாகல் இருக்கு. ரொம்ப நாளா குறைபட்டுட்டிருந்தியே... அரை கிலோ வாங்கு...''

''எதுக்கு. நாளைக்கு முழுக்க - கசப்பு, கசப்புன்னு என்னை கரிக்கறதுக்கா... ஓய்... நான் இப்ப ஞானிங்காணும்... இன்னதுதான் வேணும்கற ஆசையே இல்லே...''

''அப்ப என்னத்துக்கு மடியில புகையிலைப் பொட்டலத்தை விடாமக் கட்டிட்டிருக்கே... தெப்பக்குளத்துல விட்டுக்கடாசேன். ரொம்பத்தான் அலட்டிக்காதே... போய் வாங்கிட்டு வா...''

இவர்களின் சின்னச் சின்னத் தகராறுகளை காயத்ரி வளர்ந்து தீர்த்து வைக்க வேண்டிய நிலை...

இரண்டு பேரையுமே ஒரு அதட்டல் போடுவாள்...

''நீங்க ரெண்டு பேரும் குடுமியப்

பிடிச்சுட்டிருந்தா எப்படி...? நான் இன்னிக்கு ஸ்கூலுக்குப் போறதா வேண்டாமா?''

''இதோ வர்றேன் குழந்தே...''

சாமா, அலறிப் புடைத்துக்கொண்டு, சமையலறைக்கு ஓடுவார்...

''ஒரு பத்து நாளாவது நீங்க ரெண்டு பேரும், சண்டை போடாம இருங்களேன்... ஏம்பா... உங்களுக்கோ சாமா இல்லாம, ஒரு தம்ளர் தண்ணிகூட எடுத்துக்குடிக்கத் தெரியல்லே... சாமா...''

''என்ன குழந்தை?''

''உங்களுக்கும் இந்தக் குடும்பத்தை விட முடியாது...''

''உன்னை விட முடியாதுன்னு சொல்லு... ஒத்துக்கறேன். உங்க அப்பாகிட்ட எனக்கு என்னிக்குமே ஒட்டுதல் கிடையாது. உங்க அம்மா புண்ணியவதி. போய் சேர்ந்தா. நான் கிடந்து திண்டாடறேன். அம்மாடீ... போன ஜென்மத்துல நானும், உங்க அப்பாவும் புருஷன் பெண்டாட்டியா இருந்திருப்போம்...''

''அதெல்லாம் இல்லே. நான் உன்கிட்ட கடனை வாங்கிட்டு, திருப்பிக் கொடுக்காம செத்திருப்பேன். அதான், இந்தப் பிறவியிலே இப்படி மாட்டிட்டு திண்டாடறேன்...''

''உஷ்... கொஞ்சம் நிறுத்துங்களேன்!''

காயத்ரியின் அதட்டல், அவர்கள் இருவரது வாயையும் கட்டிப் போடும்...

ஆனால்...

அவர்கள் இருவருடைய வாயையுமே நிரந்தரமாய் கட்டிப் போடும்படி செய்துவிட்டதே அந்த சம்பவம்?

என்னதான் பாராட்டி, சீராட்டி வளர்த்தாலும் வயசுப் பொண்ணுக்கு, பெற்றவளோ - வேறு பெண் துணையோ இல்லாவிட்டால் எந்த அளவுக்கு சீர் குலைவாள் என்பதற்கு காயத்ரியே ஒரு எடுத்துக்காட்டு.

இரண்டு ஆண்பிள்ளைகளும் பனிரெண்டு வயசுவரையில், தாங்கள் போகிற இடத்துக்கெல்லாம், காயத்ரியை அழைத்துப் போனார்கள்.

அவள் - பாவாடை தாவணியை உடம்பில் சுற்றிக்கொண்டதுமே - இவர்களுடன் கோவிலுக்கும், கதாகாலட்சேபத்துக்குமாய் அலைவதை நிறுத்திக்கொண்டாள்.

''ஏண்டீ... இன்னிக்கு சுந்தர காண்டம் சொல்றார் பாகவதர்... நீயும் வாயேன்...''

''எனக்குப் படிக்கணும். நீங்க போயிட்டு வாங்க...''

''உன்னைத் தனியா விட்டுட்டு எப்படிடீ நாங்க போறது?''

''வாசப் பக்கம் பூட்டிட்டுப் போங்க...''

ஆரம்பகாலத்தில் தயங்கினாலும் - பின்னால் அதுவே வழக்கமாகப் போய்விட்டது...

கதையும், கச்சேரியும் முடிய இரவு பத்து மணியாகும். அதற்குப் பின்தான் இருவருக்கும் இந்த லோகத்து நினைப்பே வரும்.



சாமா, ரேஸ் குதிரை மாதிரி வீட்டை நோக்கி ஓடுவார்...

''சாமா... இருப்பா... ரோடுல வெளிச்சமே இல்லே... இப்படி விட்டுட்டு ஓடறியே...''

''மெதுவா, தடவிண்டு வந்து சேரும்... அங்கே குழந்தை சாப்பிடாமலேயே தூங்கியிருப்பா...''

சாமா, கதவைத் திறந்துகொண்டு போய் எந்த மூலையிலாவது புத்தகமும் கையுமாய் சுருண்டு கிடக்கும் காயத்ரியை எழுப்பி, சோற்றைப் போட்டு விட்டுத்தான் சிற்சபேசனையே கவனிக்க வருவார்...

பதினைந்து வயது வரையில் - இந்த நடைமுறையினால் அதிகம் பாதிக்கப் படவில்லை காயத்ரி.

பதினாறாவது வயசில் - அவள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் இருந்த நடுத்தர வயசு தம்பதியினர், ஊர் மாற்றலாகிப் போக - அங்கே ஒரு ஆயுர்வேத டாக்டர் குடும்பம் குடிவந்தது.

டாக்டரும், அவர் மனைவியும் தங்கமானவர்கள். ஒரு பிள்ளை, ஒரு பெண்.

பையனை - தென்னாட்டிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் படிக்க வைத்துவிட்டனர்... படிப்புதான் வரவில்லையே தவிர - மற்ற எல்லா விஷயங்களிலும் அவன்தான் முன்னால் நின்றான்.

ராஜப்பா என்று பெயர்... வெளியே ராஜு... அவனது ஒரே தங்கை கீதாவுக்கு அவன் 'கடன்காரன்...'

கீதா, கடைசி வருடப் படிப்பை காயத்ரியுடன்தான் சேர்ந்து படித்தாள்... படிப்பு முடிந்த பின்னர் இருவரும் ஒன்றாகப் பாட்டு கிளாசுக்குப் போனார்கள்... தையல் வகுப்பு, டைப்பிங் கிளாஸ் என்று எதையும் பாக்கிவிடாமல் அலசினார்கள். கல்லூரிகளுக்கு சேர்ந்தே மனு போட்டார்கள்... ஒரே கல்லூரியில் - ஒரே பாடத்தை எடுத்துக்கொண்டு, போட்டி போட்டுக்கொண்டு படித்தார்கள்.

காயத்ரிக்கு, கீதாவின் சினேகம் கிடைத்தபின், அப்பாவும், சாமாவும் தன்னை வீட்டுக்குள் வைத்து பூட்டிவிட்டு, அவர்கள் பாட்டுக்கு வெளியில் போய் வருவது ரொம்பவும் குன்றிப் போகச் செய்தது...

அவள், பெரியவர்களிடம் சண்டை போட்டாள்.

''முன்னே இருந்தவங்கதான் - வீட்டுல தங்கவே மாட்டாங்க. தங்கினாலும், பக்கத்து வீட்டுல கொலையே நடந்தாலும் கண்டுக்கவே மாட்டாங்கன்னு சொன்னீங்க... சரி ஒத்துகிட்டேன். இப்ப என்ன... கீதாவும் என் வயசுப் பொண்ணுதானே? அவளை, அவ அம்மாவும் அப்பாவும் வீட்டுல விட்டுட்டு வெளியில போயிட்டு வரல்லையா...? பூட்டிட்டா போனாங்க?''

''அவளுக்கு முகடோ, முரடோ, ஒரு அண்ணன் இருக்காண்டி. உனக்கு யார் இருக்கா?''

- இது சாமா.

''அவன் இருக்கறதும் ஒண்ணுதான். இல்லாததும் ஒண்ணுதான்... இதோ, என்னைப் பார்த்து சிரிக்கிறா. இனிமே பூட்டிட்டுப் போகாதீங்க... இல்லே, வெளியே எங்கேயும் போக வேண்டாம். என் கூடவே யாராவது ஒருத்தர் இருந்து தொலைங்க...''

சிற்சபேசன் என்ன செய்வதென்று புரியாமல் சாமாவைப் பார்த்தார். சாமாவோ, 'இதோ பாரும். உமக்கு வேணுமானா கதையும், கச்சேரியும் ஒசத்தியா இருக்கலாம்... எனக்கு, பொண் குழந்தையோட பந்தோபஸ்துதான் முக்கியம். நாளைக்கு, 'ரெண்டு தடி ஆம்பிளைகளுமாச் சேர்ந்து பொண்ணை வளர்த்தா. அதுக்கு இப்படி ஆச்சு'ன்னு ஊரார் பேசப்படாது. நீர் வேணுமானா எங்கேயும் போயிட்டு வரலாம். இனிமே நான் வரல்லே!'' - இப்படிச் சொல்லி, வீட்டோடு 'நறுக்'கென உட்காரத் தொடங்கிவிட்டார்...

நடுநடுவே நல்ல கச்சேரி என்றால் சிற்சபேசனுக்குத்தான் மனசு தாங்காது. சாமாவிடம் புலம்பிக்கொண்டே இருப்பார்.

''சாமா... பாலமுரளியோட கச்சேரி... உனக்கு அவரோட 'ஸ்ரீ அபயாம்பா' கீர்த்தனை பிடிக்குமே...''

''இன்னிக்கு ஆரண்யகாண்டத்தை, பாகவதர் சொல்றப்ப அழுதுட்டேன்போ...''

கச்சேரி யாரோடது தெரியுமோ... யாரோ... இவர் யாரோ... என்ன பேரோ... அறியேனே... இன்னுமா புரியல்லே? எம்.எஸ். சுப்புலட்சுமி... அதுக்காவது எப்படியாவது வரப் பாரு...''

இத்தனைக்கும் அசையாத சாமாவை, அசைய வைத்தது எது?

எங்கோ - திருநெல்வேலிக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில், தாலி கட்டிய பெண்டாட்டி, மூச்சுக்கு இழுத்துக் கொண்டிருப்பதாகவும், சாவதற்குள் - சாமாவை ஒரு முறை பார்த்துவிட வேண்டும் என்று துடிப்பதாகவும் - சாமாவின் மைத்துனனாகப் பட்டவன் எழுதின கடிதம்...

''ஹூம்... போக வர நூறு ரூபா ஆகுமா... பஸ் சார்ஜ், மத்த செலவு?''

அவர், சிற்சபேசனைக் கேட்டார்.

''கண்டிப்பா ஆகும். என் - சாகக் கிடக்கற பெண்டாட்டிக்கு உன்னாலான மருந்து, மாத்திரை...''

''அதை விடும். நான் போற நேரம் பார்த்து கண்ணையே மூடி வச்சாள்னா அந்திமக்கிரியைக்கான செலவு... என் மச்சினன் சும்மா பரிதாப்பட்டு இந்த லெட்டரை எழுதலைங்காணும்... அக்கா புருஷன் வந்தா, அக்காவோட கருமச் செலவை அந்த ஏமாளி தலையிலக் கட்டிடலாம்கற திட்டத்தோடதான் எனக்கு லெட்டர் போட்டு அழைக்கிறான்...''

சிற்சபேசன், சாமாவைத் தடுக்கிறார்.

''சேச்சே! ஆயிரம்தான் இருந்தாலும் - கடைசிக்காலத்துல ஒருத்திக்கு, புருஷனைப் பார்க்கணும்னு இருக்காதா... ஏன், எல்லாத்தையும் குதர்க்கமாவே அர்த்தம் பண்ணிக்கறே...''

சாமா, மனசே இல்லாமல்தான் கிளம்பினார். திரும்பி வர பத்து, பதினைந்து நாட்கள் ஆனாலும் ஆகலாம் என்று சிற்சபேசன் பயமுறுத்தியதால், புளியோதரை, பருப்புப் பொடி, கொத்துமல்லிப் பொடி என்றும் தேன்குழல், முறுக்கு என்றும் தேவையானதை செய்துவைத்து விட்டுத்தான் கிளம்பினார்.

''இந்தா குழந்தை, அடுப்பு மூட்டறப்ப ஜாக்கிரதை... இந்த நைலான், நைலக்ஸ் எல்லாம் கட்டிண்டு சமையலறைக்குள்ள வரவேப் படாது... என்ன, தெரிஞ்சுதா?''

''உம்...''

''தோசைக்கு அரைக்கறேன்; இட்லிக்கு அரைக்கறேன்னு காரியத்தை இழுத்துவிட்டுண்டு திண்டாடாதே...''

''அப்பாவுக்கு காலையில இட்லியோ தோசையோ, வேண்டியிருக்குமே சாமா...''

''எல்லாம் பத்து நாளைக்கு உப்புமாவும், ரொட்டியும் போதும்... படிக்கற அவருக்கென்ன, குழந்தையோட நிலைமை தெரியாம ஆர்டர் போட்டுடுவார்... நீ பேசாம இரு...''

இதேபோல, சிற்சபேசனிடமும் எச்சரித்துவிட்டுத்தான் கிளம்பினார்.

''நான் வர்ற வரைக்கும், கதை - காலட்சேபம் எதுவும் வேண்டாம். சிவனேன்னு வீட்டுலேயே இரும்...''

''ஆகட்டும்...''

''என்ன, பதில்லே சுரத்தே இல்லே?''

''இந்தா, போற போக்குல என் வாயைக் கிளறாதே ஆமாம்!''

''வயசுலப் பெரியவன். சொன்னா, ஏதோ விஷயம் இருக்கும்னு கேட்டுக்கணும்... அதை விட்டுட்டு, என்னமோ பலி பீடத்துல கொண்டு நிறுத்தின ஆடு மாதிரி முகத்தை வச்சுண்டு, 'ஆகட்டும்'னா எப்படி...''

சாமா, ரயில் புறப்படும் வரையில் புலம்பிக்கொண்டேதான் சென்றார்.

சாமா, ஊருக்குப் போன பின், நாலைந்து நாட்கள், வீட்டிலேயே குட்டி போட்ட பூனைபோல அலைந்தார் சிற்சபேசன்...

அன்று, அவரது நிலையைக் கண்டு பரிதாபப்பட்ட காயத்ரி கேட்டாள்,

''வெளியில போறதுன்னா, போயிட்டு வாங்களேன்...''

''அப்படி ஒண்ணுமில்லே... நேத்துலேயிருந்து கிருபானந்த வாரியார்... சொற்பொழிவு நடக்கறதாம்... கேட்காம வீட்டுலேயே உட்கார்ந்திருக்கறது என்னமோபோல இருக்கு. அவ்வளவுதான்...''

''இங்கே பாருங்க. எனக்கு தோ இருக்கா... நாங்க ரெண்டு பேருமே

இங்கே உட்கார்ந்து படிக்கிறோம்... இல்லையின்னா, அவங்க வீட்டுல போய்படிக்கிறோம்...''

''ஏன், எதுக்கும் வெளிக்கதவைப் பூட்டிட்டுப்போயிடறேனே...''

''அப்ப நீங்க எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே இருங்க...''

காயத்ரியின் பிடிவாதம் பிரசித்தமானதினால் - சிற்சபேசன் வேறு வழியின்றி, அவள் சொல்படி நடந்தார். கீதாவின் பெற்றோரும், காயத்ரியை, அவர் வரும் வரையில் பார்த்துக்கொள்வதாக வாக்களித்தார்கள்...

முதலில் சில நாட்கள் எந்தவொரு தொந்திரவும் இல்லை. ஆனால் அன்று மாலை -

- கீதா, காயத்ரியின் வீட்டிலேயே உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தாள்.

அந்த நேரத்தில் கீதாவின் அப்பா, மகளைமிக அவசரமாக அழைத்தார்...

''என்னப்பா?''

''அம்மாவுக்கு திடீர்னு நெஞ்சுவலி வந்துடுச்சு... ஓடி வாயேன்!''

''ஐய்யோ!''

கீதாவுடன், காயத்ரியும் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடினாள்.

இத்தனை நாளில் - ஒரு பொழுதுகூட, வியாதி என்று படுத்தவளில்லைதான் அந்தத் தாய்... மொழுமொழுவென்று வெண்ணெயால் செய்த பொம்மை போல இருப்பாள்.

என்னசெய்வது... நெஞ்சுவலியும், மாரடைப்பும் முன்னால் கட்டியம் கூறிவிட்டா வருகிறது...

''உடனே ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டு போனாத்தான்...''

டாக்டராக இருந்தாலும், தனக்கென்று துன்பம் வரும்போது - எந்த மனிதனும் ஆடித்தானே போய்விடுகிறான்...

அவர், ஷெட்டிலிருந்து காரைக் கிளப்ப, கீதா, தாயை நெஞ்சின் மீது சாய்த்துக்கொண்டு அழ -

மனைவியையும், மகளையும் காரிலேற்றிய டாக்டர் வாய் ஓயாமல் புலம்பித் தீர்த்துவிட்டார்.

''சமயத்துல இந்த ராஜப்பா எங்கே போய் தொலைஞ்சான்னே தெரியல்லையே...''

''நீங்க வீட்டைப் பூட்டி, சாவிய என்கிட்ட கொடுத்துட்டுப் போங்க அங்கிள்... ராஜு வந்தா, நான் கொடுத்து, அவனை ஹாஸ்பிடலுக்கு அனுப்பி வைக்கறேன்...''

காயத்ரி சொன்னவுடன், சாவியைத் தூக்கி அவள் கையில் கொடுத்துவிட்டு, காரைக் கிளப்பிவிட்டார் மனிதர்.

தன் வீட்டுக்குள் நுழைந்த காயத்ரி, கவலையுடன் மணியைப் பார்த்தாள்...

எட்டு முப்பது...

பிரசங்கம் முடிய குறைந்தது, இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. அதற்குப் பின் - சிற்சபேசன், பொடி நடையாய் வீடு வந்து சேர - அரைமணி நேரமாகும்...

'கீதாவோட அம்மாவுக்கு ஒண்ணும் நேரக்கூடாது சாமீ...'



காயத்ரி, மானசீகமாய் கடவுளை வேண்ட, தெருமுனையில் மோட்டார் சைக்கிளின் சத்தம்...

'ராஜுதான் வர்றான்...'

காயத்ரி, பரபரப்புடன் எழுந்து வாசலுக்கு ஓடினாள்...

இது நாள் வரையில், அவனுடன் நேருக்கு நேர் பேசினதே இல்லை.

அதற்குக் காரணம் - அவனிடம் ஒரு நல்ல அபிப்பிராயம் அவளுக்கு எழாததுதான்.

போதாக் குறைக்கு, கீதாவும், தன் அண்ணனின் பொறுப்பில்லாத் தனத்தைப் பற்றி, இவளிடம் நிறையச் சொல்லியிருக்கிறாள்.

ஆனால் -

இப்பொழுது அதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிற நேரமா...

''ராஜு!''

அவன், புருவத்தை உயர்த்தியபடி இவளைத் திரும்பிப் பார்த்தான்... முகத்தில் வியப்பு மின்னியது...

''திடீர்னு உங்க அம்மாவுக்கு உடம்பு சரியில்லே. செஸ்ட் பெயின்... அங்கிளும், கீதாவும், அவங்களை ஹாஸ்பிடலுக்கு எடுத்திட்டுப் போயிருக்காங்க... உன்னை நேரே ராதா நர்ஸிங்ஹோமுக்கு வரச் சொல்லி...''

அவள் பேச்சை முடிக்கவில்லை - அவன், வருத்தத்துடன் தன் மோட்டார் சைக்கிளைப் பார்த்தபடி சொன்னான்...

''த்சு... சமயத்துல மோட்டார் சைக்கிள் காலை வாரிவிட்டுடுச்சு... இல்லையின்னா, இன்னும் சீக்கிரம் வந்திருப்பேன்''

''இப்ப எப்படி...?''

''ஒரு வேஸ்ட் துணியும், ஸ்பானரும் இருந்தாக்கொடு... நானே சரி செஞ்சுக்கப் பார்க்கறேன். இல்லையின்னா - இந்த ஏரியாவுல ஒரு சைக்கிள் ரிக்ஷாக்கூட கிடையாதே...''

அவள், அவன் கேட்டதை எடுத்து வர, வீட்டுக்குள் ஓடினாள்...

திரும்பி வந்தவளின் கையிலிருந்த ஸ்பானரையும், கந்தல் துணியையும் வாங்கியவன், எதேச்சையாகக் கேட்டான்...

''உன் அப்பா இல்லையா?''

''வாரியார் பிரசங்கத்துக்குப் போயிருக்காரு...''

''குக்?''

''அவர் ஒய்ஃபுக்கு உடம்பு சரியில்லே... ஊருக்குப் போயிருக்காரு...''

அவன் தலையாட்டி அத்தனையையும் கேட்டுக்கொண்டே மோட்டார் சைக்கிளின் அருகில் போய், ஏதையோ குடைந்தான்... எங்கேயோ ஆயில் லீக் ஆவதாகச் சொல்லி, இன்னும் என்னென்னவோ செய்து பார்த்தான்...

''பரவாயில்லே... போய்ச் சேரலாம்... கொஞ்சம் சோப்பும் தண்ணியும் கொடேன்... கையைக் கழுவிக்கறேன்...''

அவள் மறுபடியும் உள்ளே ஓடினாள். சோப்புப் பெட்டியும் தண்ணீர் குவளையுமாய் - கூடத்துக்கு வந்தவள், வாசற்கதவு, உட்புறமாகத் தாழிடப்பட்டிருப்பதையும், கையில்

-மோட்டார் சைக்கிளை சுத்தம் செய்த கந்தல் துணியும், ஸ்பானருமாய் ராஜு நிற்பதையும் கண்டு விதிர் விதிர்த்துப் போனான்...

''இந்தா... கூச்சல் போடாம கிட்ட வா... இல்லே, மண்டையில ஒரே தட்டு...''

அவன் மெல்லிய குரலில் சொல்ல, அவனது வார்த்தைகளைப் புறக்கணித்துவிட்டு 'ஓ'வென அலற...

ராஜுவின் கையிலிருந்த அழுக்குத் துணி காயத்ரியின் வாயில் திணிக்கப் பட்டது.

அவன் கையிலிருந்த - மோட்டார் சைக்கிளின் - மைக்கறை அவளது உடம்பில் மட்டுமல்ல... வாழ்க்கை யிலுமே அழியாத கறையாய் தீற்றப் பட...

இரவு பத்து மணிக்கு வழக்கம்போல வீடு திரும்பிய சிற்சபேசன், மகளின் நிலையைக் கண்டு பிரமை பிடித்து நின்றார்... நடந்தது புரியவே சற்று நேரமாகியது... புரிந்த பின்னரோ... தலையைச் சுவரில் மோதிக்கொண்டு பெரிசாய் அழுதார்...

''ஐயய்யோ... மோசம் போயிட்டேனே...''

இரைந்து கதற ஆரம்பித்தவர், 'சட்'டென புத்தி தெளிந்து, குரலை அடக்கி, வாசற்கதவைத் தாழிட்டுவிட்டு மகளின் பக்கத்தில் அமர்ந்து, அவளுக்குத் தேவையான முதலுதவியைச் செய்ய...

காயத்ரி தந்தையின் தோளில் முகம் புதைத்தபடி - அழுது கொண்டே நடந்ததைச் சொல்ல...

விக்கித்துப்போய் அமர்ந்து விட்டார் அவர்...




கருணா, மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போதே - தாயிடம் குத்தலாகக் கேட்கிறாள்:

''எங்கே, உன் மருமக... இன்னும் மயக்கத்துலதான் இருக்காளா... உன் பிள்ளை, ஆபீசுக்கு லீவு போட்டிருப்பானே...''

''அவன் லீவு போட்டது என்னமோ உண்மை. அவதான், பதினொரு மணிக்கெல்லாம் எழுந்து உட்கார்ந்துட்டா. அப்புறம் என்ன... மத்தியானத்துக்கு மேல இவன் ஆபீசுக்குப் போய் தொலைக்கக் கூடாதோ... டாக்டரை வீட்டுக்கு வரவழைச்சு, அவளுக்கு ஜூஸ் பிழிஞ்சுக் கொடுத்து - 'காயத்ரீ, காயத்ரீ'யின்னு ஒரே உருகல்தான் போ...''

''ஹென்பெக்ட்...''

கருணா, பற்களை நறநறவெனக் கடித்தபடி புத்தகங்களையும், கைப் பையையும் சோபாவில் விட்டெறிகிறாள்.

சற்று முன்தான் அழுது ஓய்ந்த நரேந்திரனை மடியில் போட்டுத் தட்டியபடியே சீதம்மா, பொக்கை வாயை மலர்த்தி சிரிக்கிறாள்.

''கருணா... இப்ப என்னமோ சொன்னியே... அதுக்கு என்ன அர்த்தம்...''

''எதுக்கு...? 'ஹென் பெக்ட்'னாவா...? பெண்டாட்டி முந்தானையைப் பிடிச்சுட்டு அலையறவன்; அவ வார்த்தைக்கு கட்டுப்படறவன்னு அர்த்தம்... சேச்சேச்சே... எனக்கு வெளியில தலைகாட்டவே முடியறதில்லே... என் சினேகிதிங்க எல்லாருமே கேட்கறாங்க... 'உன் தம்பிய அன்னிக்கு அவன் பொண்டாட்டி, குழந்தைங்களோட பார்த்தேன்... பாவம்; அவனே கைக்குழந்தை யையும் தூக்கிட்டு, கை நிறைய பார்சலையும் தூக்கிட்டு, இவளுக்கு குடை பிடிச்சுட்டு வர்றான்... உங்க வீட்டுல அவ ஆட்சிதான் நடக்குதா?'ன்னு... அவமானம். நாக்கைப் பிடுங்கிக்கலாமான்னு தோணுது...''

''உனக்கே அப்படியின்னா - எனக்கு இன்னும் எப்படியிருக்கும்னு யோசிச்சுப் பாரு... அடி... பெத்து, வளர்த்து ஆளாக்கி - பி.ஏ - ன்னும் எம்.ஏ-ன்னும் படிக்கவச்சது எல்லாம் - பெண்டாட்டிக்காரிக்கு குடை பிடிக்கவும், ஜூஸ் பிழியவுமா... அட.. அந்த ஜூஸை நான் பிழிஞ்சுத் தர மாட்டேனா... வீட்டுல உலக்கை மாதிரி என்னை வச்சுட்டு; இவன் செய்யற வேலையாடி இது... நான் பிழிஞ்சா, தண்ணியவிட்டு விளாவிடுவேனோன்னு சந்தேகம்...''

கருணா, தலையைப் பிடித்தபடி - சோபாவில் சாய்கிறாள்.

''யாரோ, எக்கேடோ கெட்டு ஒழியட்டும். எனக்கு காபி உண்டா இல்லையா...''

மடியில் தூங்கிய குழந்தையை, தொட்டிலில் போட்டுவிட்டு வந்த சீதம்மா, காபி கலக்க சமையலறைக்குள் நுழைகிறாள்.

காயத்ரி இருந்தால், சீதம்மாவை இந்த வேலைக்கெல்லாம் விடவேமாட்டாள்.

''நீங்க உட்காருங்க பாட்டி. நான் எதுக்கு இருக்கேன். நீங்க, உங்க கை பாகம் எப்படியோ - அதைச் சொல்லுங்க... நான் செஞ்சுப் பார்க்கறேன்... எப்பத்தான் நானும் எல்லாத்தையும் கத்துக்கறதாம்?''

இப்படிச் சொல்லிச் சொல்லியே அவளை உட்கார வைத்துவிடுவாள்.

கருணாவுக்கு - சமையலறை என்றாலே அலர்ஜி. இன்று தன் சகோதரனை, 'பெண்டாட்டி தாசன்' என்று இளக்காரமாகச் சொல்லும் இவள் - இவளது புருஷன் இருந்த காலத்தில் எப்படி இருந்திருக்கிறாள் என்பது சீதம்மாவுக்குத் தெரியாதா?

தினமும் குக்கர் வைக்க சோம்பேறித்தனம் பட்டுத்தானே - அவள், பகல் முழுக்க பிறந்த வீட்டில் டேரா போடுவாள்...

கடைசி வரையில், இவள் கணவனுக்கு - மனைவியின் கைச் சமையல் எப்படியிருக்கும் என்றே தெரியாமல் போய்விட்டதே... பாவம்...

ஆனால், அம்மாவும், பெண்ணுமாய் சேர்ந்து தங்களது கைச் சமையலையும், காரியம் செய்யும் நேர்த்தியையும் பற்றிப் பேச ஆரம்பித்தால் லேசில் ஓய மாட்டார்கள்...

''எங்க அம்மா வெங்காய சாம்பார் வச்சா இன்னிக்கு முழுக்க சாப்பிடலாம்...''

- இப்படி கருணாவும்,

''கருணா பதிமூணு வயசுல ஒரு தேங்காத் துவையல் அரைச்சாப் பாரு... அதைப் பார்த்து அசந்துபோய்தான் எங்க அண்ணா, தன் பிள்ளைக்கு, கருணாவை நிச்சயம் பண்ணினாராக்கும்...''

- இப்படி பார்வதியும், தங்களுக்குள்ளேயே மாற்றி மாற்றி மாலை போட்டுக்கொள்வார்கள்.

உண்மையில் - காயத்ரி, அந்த வீட்டுக்கு மருமகளாக வரும் வரையில், சீதம்மாதான் சமையல் பொறுப்பையே ஏற்றுக் கொண்டிருந்தாள்.

அதெல்லாம் ஒவ்வொருத்தர் ராசி.

கல்யாணமாகி, குழந்தை பெற்று, பேரன்கள் எடுத்தும்கூட, அதிகம் அலட்டிக்கொள்ளாத தேகம் பார்வதியுடையது.

அம்மா, பெண் இருவருக்கும் - காயத்ரியை பிடிக்காமல் போனதற்கு காரணம் இருக்கிறது.

பார்வதி - தனது அண்ணன் மகனை மாப்பிள்ளை ஆக்கிக் கொண்டது போல அவன் மகளையும் மருமகளாக்கிக்கொள்ள விரும்பினாள்.

பாலாஜிக்கு இது பிடிக்கவில்லை. நேரே பாட்டியிடம் சொல்லிவிட்டான்.

''எனக்கு உறவுல கல்யாணம் செஞ்சுக்கறதுல இஷ்டமே இல்லே பாட்டி. மாமா பொண்ணை வேற பெரிய இடமாப் பார்த்துக்கொடுக்க சொல்லுங்க...''

சீதம்மா இதற்கு மேல், 'ஏன் பிடிக்கவில்லை?' என்றோ, 'அவளுக்கு என்ன குறைச்சல்?' என்றோ கேள்வி கேட்டுக் கொண்டிருக்கவில்லை.

அந்த அளவுக்கு நாசூக்கு தெரிந்தவள் கிழவி.

எப்பொழுது மாமா பெண் வேண்டாம் என்று சொல்லிவிட்டானோ - அப்பொழுதே பார்வதியும், நாராயணனும் பெரிய கோடீஸ்வரன் வீட்டுப் பெண்களின் ஜாதகங்களை எல்லாம்தான் வரவழைத்தனர்...

காயத்ரியின் ஜாதகம் - சீதம்மா கோவிலுக்கு போனபோது - சமையற்காரர் சாமா மூலமாகக் கிடைத்தது...

சாமாதான் - காயத்ரியின் ஜாதகத்தை, மடியில் கட்டிக் கொண்டே அலைகிறாரே...

சீதம்மா, தன் உறவினர் வீட்டுக் கல்யாணத்துக்காக திருச்சி வந்திருந்த சமயம் அது...

முகூர்த்தம் முடிந்த கையோடு - திருவானைக்காவல் போய் வரலாம் என்று மகளை அழைத்தாள் சீதம்மா.

பார்வதிக்கு கல்யாண வீட்டுக்கு வந்தால் சகலமும் மறந்து போய்விடும். வீட்டில்தான் சாமி, பூஜை எல்லாம். கல்யாணங்களில் யார் வாயையாவது கிண்டி வம்பை வளர்ப்பதில்தான் அவளுக்கு குஷி. கோவில், குளம் எல்லாமே அப்புறம்தான்!

''இந்தா... நீ வேணுமானா போயிட்டு வா. எனக்கு கையும் காலும் கெஞ்சறது... கோவிலும் தெய்வமும் - மனசுக்குள்ள இருக்கு...''

பார்வதி, பரம வேதாந்தி போலச் சொன்னாள். சீதம்மா கிளம்பும்போது மாத்திரம், காரை எடுத்துக் கொண்டு போகும்படி மிக ஞாபகமாய் சொன்னாள்.

''இங்கே வந்ததுலேயிருந்து, உன் பேரன் 'போரடிக்கிறது போரடிக்கிறது'ன்னு முணகிட்டே இருக்கான். சாயந்திரமா கிளம்பி மெட்ராஸ் போறானாம். நமக்கு வேணுமானா, 'ஃபர்ஸ்ட் கிளாஸ்' டிக்கட் வாங்கித் தர்றானாம்... அவனுக்கு கொஞ்சம் புத்தி சொல்லி, அவனையும் உன்கூட கிளப்பிட்டு போ...''

''பாலாஜிக்கு மெட்ராஸ்லே வேலை இருந்தா கிளம்பட்டுமே பார்வதி... எதுக்கு வீணா, அவனையும் இங்க இருக்கச் சொல்றே...''

இதற்குள் கருணா தொடுத்தாள்.

''பாட்டிக்கு எல்லாத்தையும் விவரமா சொன்னாத்தான் புரியும். நாளைக்கு - ஸ்ரீரங்கம் சுந்தரராமன் பொண்ணைப் பார்க்கப் போக வேண்டாமா... முடிஞ்சா, அதையே முடிச்சிடலாம்னு அம்மா நினைச்சுட்டிருக்கா. இந்த நேரத்துல - இவன்பாட்டுக்கு மெட்ராஸ் போய் வச்சா... மாப்பிள்ளையின்னு நாங்க, யாரைக்கூட்டிட்டுப் போறதாம்?''

சீதம்மா, முகவாயில் கையை வைத்தாள்.

''ஏண்டீ, பொண்ணு கருப்பா, சிகப்பா, குடும்பத்துக்கு அடங்கின சரக்கா, இல்லையா'ன்னு இன்னும் தெரிஞ்சுக்கலே... பாலாஜி மனசுக்கு அந்தப் பொண்ணைப் பிடிக்கணும்... அவளுக்கும் இவனைப் பிடிக்க வேண்டாமா...''

''ஏன், நம்ம வீட்டு சனியனுக்கு என்ன குறைச்சல்? ஆள் அம்சமா இருக்கான். ஆபீசுல பெரிய பதவி... காரு, மோரு எதுக்கும் குறைச்சல் இல்லே... அப்புறமென்ன... அந்தப் பொண்ணு, கொஞ்சம் ஏறத்தாழ இருந்தாலும் முடிச்சிட வேண்டியதுதாங்கறேன். நூறு பவுன் போடறாங்களாம். ஒரே பொண், சொத்தெல்லாம் இவளுக்குத்தான்...''

பார்வதி, நீட்டி முழக்கினாள்.

கருணாவுக்கு, தன்னை விடவும்,

பாலாஜிதான் பாட்டிக்கு உயர்த்தி என்கிற எண்ணம் எப்போதும் உண்டு. அதை அடிக்கடி சொல்லிக் காண்பிப்பாள்...

இப்பொழுதும் அதையேதான் செய்தாள்.

''அதுதான், பாட்டியும் பேரனுமாக குலாவிட்டு இருப்பீங்களே... அவனை எப்படியாவது இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்கப் பாரு...''

சீதம்மா, கருணாவை உறுத்துப் பார்த்துவிட்டு, பாலாஜியுடன் காரிலேறினாள்.

கார், திருவானைக்காவலை நோக்கிப் பறந்தபோதே - பாலாஜி, பாட்டியிடம் படபடவென, தன் ஆதங்கத்தை எல்லாம் கொட்டித் தீர்த்துவிட்டான்.

''மாமா பொண்ணு - வேலைக்குப் போறதாலதான் உசத்திங்கற கர்வம் ஜாஸ்தி; இந்த வீட்டுக்கு ஒரு கருணாவே போதும்னு சொன்னே... ஒத்துகிட்டேன். இப்ப, இந்தப் பொண்ணை, பார்க்காமலேயே வேண்டாம்னு சொல்றியே. இதை எப்படி நான் ஏத்துக்கறது?''

''பாட்டீ... பொண்ணைப் பார்க்கப் போயிட்டு - 'பிடிக்கலே'யின்னு சொல்றதெல்லாம் எனக்குப் பிடிக்காது... பொண்ணு அழகாயிருக்கலாம். ஆனா, அது முக்கியமில்லே. நான் விரும்பறபடி வேலைக்குப் போகாம - எனக்கு வர்ற சம்பளத்துல நிறைவா குடித்தனம் பண்ணற பொண்ணாயிருக்கணும்...''

''அதைக் கேட்டுட்டாப் போச்சு...''

பாலாஜி, சீதம்மாவைப் பார்த்துச் சிரித்தான்.

''ஸ்ரீரங்கம் சுந்தரராமன், நூறு பவுனையும், தன் சொத்தையும் சும்மாக் கொடுக்கலே பாட்டி... அத்தனையையும் எனக்கு விலையாக் கொடுக்கறார். தன்னை விடவும் அந்தஸ்துல குறைஞ்ச எடத்துல இருந்து மாப்பிள்ளைய செலக்ட் பண்ணினா - வீட்டு மாப்பிள்ளையா, ஸ்ரீரங்கத்தோட கிடப்பேனில்லே?''

''இப்படியும் நடக்குமோடா?''

சீதம்மா அதிசயித்துப் போனாள்.

''இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?''

''அந்த வம்சமே அப்படித்தான். இன்னிக்கு காலையில முகூர்த்தத்தும் போது - ஸ்ரீரங்கம் சுந்தரராமன், அப்பா கிட்டப் பேசிட்டிருந்தார். அப்ப, நானும் ஏதாவது கேட்டு வைக்கணுமேன்னு - 'உங்களுக்கு சொந்த ஊரே ஸ்ரீரங்கம் தானா'ன்னு கேட்டேன்... அதுக்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா...''

''......''

''சொந்த ஊர் மதுரை. எங்கே... கல்யாணமானதுலேயிருந்து இங்கேதான் இருக்கேன்... என் மாமனாருக்கு - என் பெண்டாட்டி ஒரே பொண்ணு... ரொம்பச் செல்லம். கல்யாணத்தைச் செஞ்சு, புகுந்த வீட்டுக்கு அனுப்ப மனசே வரல்லே அவருக்கு... 'இங்கேயே தங்கிடுங்களேன் மாப்பிள்ளே'ன்னு சொன்னார். நானும், சரிதான்னு தங்கிட்டேன். எங்கே தங்கினா என்ன... இப்ப ஸ்ரீரங்கம் - சொந்த ஊராச்சு! மதுரை - மறந்தே போச்சு!''

பாலாஜி, காலையில் சந்தித்த மனிதர் சொன்னது போலவே சொல்லிக்காட்டினான்.

''நீங்களே சொல்லுங்க... நானும் மெட்ராஸையும், உங்களெல்லாரையும் மறந்துட்டு - இதே ஸ்ரீரங்கத்துல - சுந்தரராமன் மக, அருமையா வெள்ளி டபரா தம்ளர்லே ஆத்திக் கொடுக்கற காபியக் குடிச்சிட்டு, பெண்டாட்டிய சுத்திச்சுத்தி வந்திட்டிருக்கட்டுமா?''

திருவானைக்காவலில் -

அம்பாள் சந்நிதியில், கண் மூடி நின்று பிரார்த்தனை செய்தாள் சீதம்மா...

'தாயே... என் பேரனுக்கு, நல்ல பொண்ணாப் பார்த்து நீதான் முடிச்சு வைக்கணும்...'

அதே நேரத்தில் சாமா, குருக்கள் ஒருவரிடம் இரைந்து சொல்லிக் கொண்டிருந்தார்.

''கல்யாணம்கறது ஆயிரம் காலத்துப் பயிர்தான்... ஒத்துக்கறேன். அதுக்காக இப்படியா ஒவ்வொரு வரனா தட்டிக் கழிப்பான் ஒரு மனுஷன்... இதுவே என் பொண்ணா இருந்தா, 'பளிச்'சுனு இழுத்துண்டு வந்து மணையில உட்கார்த்தி வைப்பேன்...''

''ஒரே பொண் இல்லையா சபேசனுக்கு? அதுவும் அவர் ஜாதியில படிச்ச பிள்ளை கிடைக்கறது அபூர்வம்... அதான் யோசிக்கிறார் போல இருக்கு...''

சாமா, குருக்களின் பேச்சை புறங்கையால் ஒதுக்கியபடி ஆவேசமாய் பேசினார்.

''ஜாதி என்னய்யா பெரிய ஜாதி? என்னைக் கேட்டா, பூலோகத்துல ரெண்டே ஜாதிதான் இருக்குன்னு சொல்லுவேன். ஒண்ணு அடிக்கப் புடுங்கற ஜாதி... இன்னொண்ணு இருக்கறதைப் பறி கொடுத்துட்டு கட்டை விரலை சூப்பற ஜாதி... இந்த மனுஷன், நான் சொன்ன ரெண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்காணும் - அதான் இப்படி கிளி மாதிரிப் பொண்ணை வச்சுண்டு, ஊரளவுக்கு வசதியா கல்யாணத்தைப் பண்ணிக் கொடுக்கப் பணத்தையும் வச்சுண்டு, மாப்பிள்ளை, தானா - விலாசம் தேடிண்டு வருவான்னு உட்கார்ந்திருக்கார்...''

சீதம்மா, அம்மனின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

'நீ கேட்ட மாதிரி, நல்ல இடத்தைத்தான் காட்டிக் கொடுத்துட்டேனே... அப்புறம் என்ன கவலை...'

-இப்படி, அம்மன் கேட்பது போல ஒரு தோற்றம். சந்நிதியில் எரிந்து கொண்டிருந்த தூண்டா விளக்கிலிருந்து ஒரு சுடர் தெறித்து விழ -

அதையே நல்ல சகுனமாய் எடுத்துக்கொண்டு நேரே - சாமாவின் எதிரில் போய் நின்றாள்.

சாமா, சீதம்மாவின் கம்பீரத்துக்கும், கருணை வழியும்

முகத்துக்கும், 'பொல்'லென்று நரைத்த தலைக்கும் மதிப்பு கொடுப்பவராக, பவ்யமாய் தோளில் கிடந்த துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார்.

''நீங்க...''

''இங்கே ஒரு கல்யாணத்துக்கு வந்தோம். அப்படியே அம்பாளை தரிசனம் பண்ணிட்டுப் போகலாமேன்னு... இப்ப, யார் பொண்ணையோ பத்தி சொல்லிட்டிருந்தீங்களே... உங்க சிநேகிதர் மகளா..?''

''அது வந்தும்மா...''

- இப்படி ஆரம்பித்த சாமா, சிற்சபேசன் குடும்பத்துக்கு தான் எப்படி வேண்டியவன் என்பதையும், சபேசனின் குடும்பத்தைப் பற்றியும், காயத்ரியின் படிப்பு, அழகு, சமர்த்தைப் பற்றியும் கொஞ்சம் தாராளமாகவே சொன்னார்.

மடியிலேயே பத்திரப் படுத்தி வைத்திருந்த காயத்திரியின் ஜாதகத்தையும் எடுத்து நீட்டினார்.

சீதம்மாவுக்கே ஓரளவுக்குப் பொருத்தம் பார்க்கத் தெரியும்.

ஜாதகப் பொருத்தத்தை விடவும் - சகுனம் மிக அற்புதமாக இருப்பதாக அவள் மனசுக்குள் பட்டுவிட்டது.

''பாலாஜி... நாம வேணா - இவர் சொல்ற பொண்ணைப் பார்த்துட்டுப் போவோமா...?''

என்னதான் படித்து, பெரிய உத்தியோகத்திலுள்ள ஆண் பிள்ளையாக இருந்தாலும் - இரண்டு வேற்று மனிதர்களை வைத்துக் கொண்டு, சீதம்மா, இப்படி கேட்டதில் தடுமாறிப் போகிறான் அவன்.

''என்ன பாட்டி இது... திடுதிப்புனு...''

''இதப் பாரு... உனக்கோ இந்த மாதிரி சம்பிரதாயமான விஷயங்கள்லே எல்லாம் நம்பிக்கை இல்லே... ஜாதகம் பார்த்து, லௌகிகம் பேசி, லெட்டர் போட்டு, சொஜ்ஜி, பஜ்ஜியோட போய் பொண்ணு பார்க்கறதும் பிடிக்காது... வந்த இடத்துல, ஏதோ ஒரு சிநேகிதர் வீட்டுக்கு விஸிட் பண்ற மாதிரி...''

''இல்லே பாட்டி. முன்னே பின்னே, அறிமுகமில்லாதவங்க வீட்டுக்கு - ஒரு முன் அறிவிப்புகூட இல்லாமப் போறது நாகரீகமில்லே...''

சாமா, துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டார்.

''அம்மா... உங்க பேரன் சொல்றதும் நியாயம்தான். ஒண்ணு செய்யலாமா..?''

''என்ன...''

''பொண்ணையும், அவ அப்பாவையும் இதோ - ஒரு அரை மணி நேரத்துல இங்கே அழைச்சிண்டு வந்துடறேன்... டாக்சியில போயிட்டு, டாக்சியிலேயே வந்துடறேன்...''

''......''

''என்ன யோசனை... பொண்ணைப் பிடிச்சா, எல்லாருமா உங்க காருல வீட்டுக்குப் போய் மேற்கொண்டு பேசுவோம்... உங்களுக்குப் பிடிக்கலையா... பரவாயில்லே... டாக்சி சார்ஜை மாத்திரம் உங்க கிட்டயிருந்து வாங்கிண்டுடறேன்...''

சாமாவின் கலகலப்பான பேச்சில், பாலாஜி தன்னை மீறிச் சிரித்துவிட்டான்.

இது போதாதா சாமாவுக்கு? -கிளம்பிவிட்டார்.

அவர் திரும்பி வரும் வரையில், பாட்டியும் பேரனுமாய், கோவில் பிரகாரத்தை மௌனமாய் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாலும் - மனசுக்குள் ஒருவித பதட்டம் இல்லாமலில்லை...

வருகிறவளை, தனக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை நாசூக்காக - பெண்ணுக்கோ, பெண்ணைப் பெற்றவருக்கோ - எந்தவித உறுத்தலும் ஏற்படாதபடி - எப்படி எடுத்துச் சொல்வது என்பது பாலாஜியின் கவலை.

அம்மன் சந்நிதியில் பார்க்கப் போகிற பெண் மனசுக்குப் பிடித்திருந்து, இந்தக் கல்யாணம் நல்லபடியாக முடிய வேண்டுமே என்பது சீதம்மாவின் கவலை...

சொன்னபடி அரை மணி நேரத்தில் வந்துவிட்டார் சாமா...

காயத்ரியும், சிற்சபேசனும் காரைவிட்டு இறங்குவதற்குள்-சாமா, தரையில் உருட்டிவிட்ட எலுமிச்சம் பழம் போல வேகமாய் ஓடி வந்து பாலாஜியின் காதைக் கடித்தார்...

''பொண்ணு பார்க்கன்னு நான் சொல்லலே அவகிட்ட... அப்பாவுக்கு தெரியும்... அம்பாளைப் பார்த்துட்டு யதேச்சையா உங்களைப் பார்த்துப் பேசற மாதிரி. இல்லைன்னா குழந்தை ரொம்ப வெட்கப்படுவா...''

சொன்ன வேகத்தில், ஒரு அர்ச்சனைசீட்டை வாங்கிக்கொண்டு, காயத்ரியுடன் போய் ஒட்டி நடந்தார் சாமா...

சீதம்மாவும், பாலாஜியும் மறுபடியும், அம்மன் சந்நிதிக்குள் நுழைந்தனர்...

காயத்ரி, இருகைகுவித்து கண்மூடி நிற்க, பாலாஜி, அவளையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்க - சீதம்மா, பேரனுக்கும், காயத்ரிக்குமுள்ள ஜோடிப் பொருத்தத்தைப் பார்த்தபடி வியந்து நின்றுவிட்டாள்...

'இது என்னது... இவனுக்குன்னு பிரும்மா படைச்ச மாதிரி... அந்த உடம்பு வாகும், முகத்துல ததும்பற சாந்தமும்...'

'இதைத்தான் தெய்வ சங்கல்பம்னு சொல்றாங்களோ...?'

சாமா, அப்பொழுதுதான், சீதம்மாவையும் பாலாஜியையும் கவனித்தவர் போலப் பேசினார்...

''அடடே... நீங்களா...? சௌக்கியமா...? எங்கே இப்படி..?''

''ஒரு கல்யாணத்துக்கு வந்தோம்... அப்படியே அம்பாளை தரிசனம் பண்ணிட்டுப் போகலாமேன்னு...''

சீதம்மாவும் நிலைமையை சமாளித்தாள்.

''தரிசனம் ஆச்சா?''

இது, சாமா - பாலாஜியைப்

பார்த்துக் குறும்பாய் கேட்டது.

அவனுக்கு சிரிப்பு வந்தது... காயத்ரியின் மீது வைத்த கண்களை எடுக்காமலேயே சொன்னான் அவன்...

''ஆகா... மனசுக்கு ரொம்பவும் திருப்தியா இருக்கு...''

சாமாவின் முகத்தில் கோடி சூர்ய பிரகாசம்...

சிற்சபேசனை, அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார்.

என்னமோ, அப்பொழுதுதான் கல்யாணப் பேச்சையே ஆரம்பிப்பது போல ஆரம்பித்தார்.

''பேரனுக்கு இன்னும் நல்ல வரன் கிடைக்கலையாக்கும்...''

''பார்த்துட்டிருக்கோம்...''

''சார் கூட, உங்க சமூகத்தை சேர்ந்தவர்தான். பொண்ணைப் பார்த்தீங்க இல்லையா...''

சீதம்மா, சாமாவின் ராஜதந்திரத்தை மெச்சி, சிரித்தபடியே சொன்னாள்.

''எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு... பாலாஜிக்குப் பிடிச்சா சரிதான்...''

''நல்லாயிருக்கே பாட்டி... நான் என்னிக்காவது உங்க வார்த்தைய மீறி இருக்கேனா...? என்னோட அபிப் பிராயத்தை மட்டும் கேட்டா எப்படி? அங்கே அவங்க பொண்ணோட அபிப்பிராயத்தையும் கேட்க வேண்டாமா...''

''கேட்டுட்டாப் போச்சு...''

சாமா, உற்சாகமாய் குரல் கொடுத்தார்.

பாலாஜிதான் தடுத்தான்.

''சேச்சே... இப்படி கோவில்லே வச்சுக் கேட்டா எப்படி... வீட்டுக்குப் போய் பேசுவோம்... வாங்க... என் கார் இருக்கு...''

''நாங்க டாக்சியில இல்லே வந்திருக்கோம்...''

சாமா, கண்களை சிமிட்டினார்...

''அதனால என்ன... நான் பணத்தைக் கொடுத்து அனுப்பிட சொல்றேன். பாலாஜி, வண்டிய எடுப்பா...''

சீதம்மாவும் கலகலப்பாய் சொன்னாள்.

காயத்ரி...

அவளொருத்திதான் பேச்சே எழும்பாத பிரமிப்பில் சிலையாய் நின்று கொண்டிருந்தவள்.

சாமா, அவளை திருவானைக் காவல் கோவிலுக்கு அழைத்தபோதே - 'நான் எதற்கு' - என்று ஆட்சேபித்தாள்...

அவர்தான் சொன்னார்:

''கோவில்லே அம்பாளுக்கு இன்னிக்கு ரோஜாப்பூப் பாவாடை சார்த்தியிருக்கு. போதாக்குறைக்கு குருக்களுக்கு தெரிஞ்சவர் ஒருத்தர் - அவர் வீட்டுக்கு வந்திருக்காராம்... ஜாதகம் இல்லாமலேயே ஒருத்தரோட எதிர்காலத்தைப் 'பளிச்'சுனு சொல்றாராம். உடனேயே உன்னை அழைச்சுட்டுப் போகணும்னு ஓடிவந்தேன்.''

''எனக்குத்தான் எதிர்காலமே இல்லையே சாமா... இன்னும் என்ன கேட்கிறதுக்கு இருக்கு?''

இதைச் சொல்லும்போதே - காயத்திரியின் கண்களில் நீர் திரையிட்டது... தொண்டை அடைத்தது.

சிற்சபேசன், மகளின் நிலையைக் கண்டு, பதறிவிட்டார்...

உள்ளுக்குள் சாமாவின் இதயத்தில் ரத்தம் கசிந்தது என்றாலும், அதைக் கொஞ்சமும் வெளிக்காட்டாமல் பேசினார் அவர்...

''காயத்ரீ... உன்கிட்ட எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... வாழ்க்கையில விபத்துகள் சகஜம்னு...''

''அது சரி... இந்த விபத்து - என்னையே இல்லே விழுங்கிடுச்சு...''

''அப்படியின்னு நீ நினைச்சிட்டிருக்கே... தப்புடா... நீ யாருக்கும் எந்தவித துரோகமும் செய்யலே... கடவுள், உன் விஷயத்துல தெரியாத்தனமா ஏமாந்துட்டார்... இல்லே ஏமாத்திட்டார்... அவர், தான் செஞ்ச தப்புக்காக வருத்தப் படறார்னா - உனக்கு ஒரு நல்ல எதிர்காலத்தையும் அவரே உருவாக்கித் தரணும். பார்க்கலாம். அவருக்காச்சு... நமக்காச்சு... கிளம்பு.''

அவளைக் கிளப்பப் பட்ட பாடு, அவருக்குத்தான் தெரியும்.

அவளுமே - ஏதோ, சாமாவின் வற்புறுத்தலுக்காகத்தான் கிளம்பினாள்...

இங்கே வந்ததுமோ -

'கல்யாணத்துக்காக ஜோஸியம் பார்க்க வந்த இடத்தில் கல்யாணமே நிச்சயமாகிவிடும் போலிருக்கிறதே...'

- என்கிற பயம், அவளை ஆட்கொண்டது.

பாலாஜியையும், சீதம்மாவையும், நிமிர்ந்து பார்க்கக்கூட தைரியமில்லை அவளுக்கு.

'இது என்ன விபரீதம்...'

'கல்யாணம் செய்து கொண்டு, குடும்பம் நடத்துகிற மாதிரியா என் கடந்தகாலம் இருந்திருக்கிறது...'

அவள், மென்ன சாமாவின் கையைத் தொட்டாள்.

''என்னம்மா...''

''எனக்கு என்னமோ பயமா இருக்கு சாமா...''

இதற்குள், சீதம்மா நின்று, திரும்பி, அவர்களைப் பார்த்தாள்.

''என்ன சொல்றா குழந்தை...''

''நீங்கதான் சொல்லிட்டேளே... குழந்தைன்னு... பயம்மா இருக்காம் கல்யாணம் பண்ணிக்க. அசடு, அசடு...''

சீதம்மா, காயத்ரியின் தோளைப் பற்றி, தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

''உன்னை எங்கேயோ ஊர் பேர் தெரியாத காட்டுக்கா அனுப்பப் போறாங்க... எங்க வீட்டுக்கு மருமகளா வரப்போறவளுக்கு எந்தக் கஷ்டமும் நேராதும்மா... நான் எதுக்காக இருக்கேன்...''

சீதம்மாவின் வார்த்தைகள், காயத்ரியின் புண்பட்ட நெஞ்சுக்கு எத்தனையோ ஆறுதலாக இருந்தாலும் - இத்தனைக்கும் நடுவில் எங்கோ வளரும் ஒரு பிஞ்சு முகம், கண்ணெதிரில் நிழலாடாமலில்லை.

அந்த முகத்தை அவள் எப்படி மறப்பாள்?



# 4

உண்மையில், சாமாவின் துணை மட்டும் இல்லாமலிருந்தால், அன்றைக்கு அந்த இக்கட்டான நிலைமையை எப்படி சமாளித்திருப்பார் சிற்சபேசன்...

அந்தக் கணமே, அடுத்த வீட்டுக்காரரை சந்தித்து, அவரது மகன் செய்த அக்கிரமத்தை சொல்ல வேண்டும் என்று நெஞ்சு பதறினாலும் - காயத்ரியைவிட்டு எங்கேயுமே நகர விரும்பவில்லை அவர்...

'பொழுது விடியட்டும். பார்ப்போம்' என்றுதானிருந்தார்...

ராஜு செய்த அட்டூழியத்தைச் சொன்னால், இதயநோயாளியான அவன் தாய் தாங்குவாளா என்கிற நினைப்பும் எழாமலில்லை.

கட்டுக்கடங்காத கோபம் பீறிட்டது.

'யார், எக்கேடு கெட்டுப் போனா எனக்கென்ன... என் பொண்ணுக்கு என்ன பதிலை சொல்லப் போறான் அந்த டாக்டர்னு சட்டையப் பிடிச்சு, உலுக்கி கேட்கலை... நான் சிற்சபேசனில்லே...'

பொருமிப் பொருமி நெஞ்சே வெடித்துவிடும் போன்ற நிலையில் சிற்சபேசன் அன்றைய இரவைப் பிடித்துத்தள்ள - பொழுது ஒருபக்கம் விடியும்போதே - வாசற் கதவு தட்டப்படுகிறது.

திறந்தால் -

பெட்டியும் கையுமாக சாமா...

முகத்தில் பத்து நாளைய தாடி... இருந்தாலும், கண்களில் தனது இருப்பிடத்தைத் தேடி வந்து விட்ட நிம்மதி.

''என்ன பார்க்கறீர்... காரியமெல்லாம் முடிஞ்சுடுத்து... நான் போன அன்னிக்கு ராத்திரியே கண்ணை மூடிட்டா. ஒண்ணும் குறை வைக்கலே. எல்லாத்தையும் பிரமாதமா செஞ்சு முடிச்சுட்டுத்தான் வர்றேன்... அதுசரி... என் பெண்டாட்டி செத்ததுக்கு நானே வருத்தப்படலே... நீர் எதுக்காக இப்படி மூஞ்சிய வச்சிண்டிருக்கிர்?''

''சாமா...''

''என்னங்காணும்...?''

''ஐயோ சாமா... அதை நான் எப்படி சொல்லுவேன்.''

சிற்சபேசன், நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொண்டு அலறினார்.

விஷயத்தைக் கேட்டதும் ஆடிப் போய்விட்டார் சாமா...





'என்ன குழந்தை... உனக்கு இப்படி ஒரு கஷ்டம் வரலாமா...' - என்று, காயத்ரியின் முகத்தை ஏந்திக் கொண்டு தேம்பினார்...

கொஞ்ச நேரம்தான். உடனேயே தன்னை சமாளித்துக் கொண்டு, ஆவேசமாய் எழுந்தார்.

''ஓய்... நீர் இங்கேயே இரும். நான், அந்தப் பையன் எந்த மூலையில இருந்தாலும் பிடிச்சு இழுத்துண்டு, அவனோட அப்பனைப் போய் பார்க்கறேன்... அவன் என்ன ஜாதியோ, எப்பேர்பட்ட போக்கிரியோ... அதையெல்லாம்பத்தி யோசிக்கறதுக்கு இப்ப நேரமேயில்லை... கையில தாலியக் கொடுத்து, 'கட்டுடா'-ன்னு மிரட்ட வேண்டியதுதான்...''

''அவனைக் கல்யாணம் பண்ணிக்கறதை விடவும், நான் செத்துப் போயிடலாம் சாமா...''

முதல் முறையாக, வாய் திறந்தாள் காயத்ரி.

''அப்படி சொல்லாதேம்மா... மதம் பிடிச்ச யானையக்கூட, ஒரு அங்குசத்தாலே அடக்க முடியும்கறப்ப, ஒரு வெறி பிடிச்ச மனுஷனையா வழிக்கு கொண்டு வரமுடியாது... பார்ப்போம்...''

அவர் 'விருட்'டெனக் கிளம்ப - அதே நேரத்தில் பக்கத்து வீட்டு வாசலில் ஆம்புலன்ஸ் வந்து நின்றது...

சாமா ஒரு வினாடி தயங்கினார்.

'என்னது... சம்பந்தம் பேசப் போறதுக்குள்ளே - சம்பந்தி அம்மா மண்டையப்போட்டுட்டாளா... இந்த சமயத்துல - அந்த மனுஷன்கிட்ட விஷயத்தை எப்படி சொல்றது...'

அவர், சிற்சபேசனின் முகத்தைப் பார்க்க - அவரோ செய்வதறியாது கைகளைப் பிசைந்தபடி, கூடத்தில் நடை போட...

''ஐயய்யோ... என்னைவிட்டுப் போயிட்டியே... இதுக்கு மேல நான் எதுக்காக இருக்கணும்... ஆஸ்பத்திரியில இருக்கற உங்க அம்மாவுக்கு நான், என்ன பதிலைச் சொல்லுவேன்...''

பக்கத்து வீட்டு மனுஷரின் குரல், உச்சஸ்தாயியில் கேட்க... அதே சமயத்தில், ஆம்புலன்ஸிலிருந்து இறங்கிய சடலத்தைக் கண்டதும் அலறிவிட்டார் சாமா...

''அடப்பாவி! என்ன கண்றாவி இது... ஐயய்யோ... என் குழந்தை கதி என்ன...''

சாமாவை விடவும் ஒரு கட்டை அதிகமான சுருதியில் சிற்சபேசன் கத்த - அவரது வாயை இறுக மூடி, மறுபடியும் வீட்டுக்குள் இழுத்து வந்தார் சாமா...

''கத்தாதீர்...''

''கத்தாம என்னடா பண்ணுவேன்... கடன்காரன் இப்படியொரு காரியத்தைப் பண்ணிட்டு...''

பக்கத்து வீட்டு வாசலில் கூட்டம் அலை பாய்ந்தது... இதோ, 'ஐயோ அண்ணா... அம்மாவுக்கு நான் என்ன சொல்லுவேன்' - இப்படி கதறும் குரல்...

காயத்ரி, நெஞ்சை ஒரு கையால் பிடித்துக்கொண்டு - பக்கத்து வீட்டை



எட்டிப் பார்க்கிறாள்...

கூடத்தில், கழுத்து கொள்ளாது மாலைபோட்டு படுத்திருக்கிறான் ராஜு...

'எப்படி செத்தான்..?'

'அவன் செய்த அக்கிரமத்தை அந்தக் கடவுளாலேயே தாங்க முடியவில்லையா..?'

இதற்கெல்லாம் விடையளிப்பது போல, வாசலில் நின்ற கும்பலினூடே எழுந்த பேச்சுக்கள்:

''மிட்நைட்லே நடந்திருக்கு சார்... வீட்டுக்கு வந்து, விஷயத்தைக் கேள்விப்பட்டு நேரே நர்ஸிங் ஹோமுக்கு வேகமா வண்டிய விட்டுட்டு வந்திருக்கான்... பாலத்துல வர்றச்சே - லாரி மேல மோதி... ப்ச்... அங்கேயே உசிரு போயிடுச்சு...''

''அம்மாவைக் கொண்டு போக வந்த எமன், பாவம், பிள்ளை உசிரைக் கொண்டு போயிட்டான்...''

''அங்கே, அம்மா உசிரும் ஊசலாடிட்டுத்தான் இருக்கு... ராஜு, ராஜுன்னு ஓயாம, பிள்ளை பேரைச் சொல்லி, அனத்திகிட்டிருக்கா...''

''முரட்டுப் பிள்ளை. டாக்டருக்கும், அவரு சம்சாரத்துக்கும் எப்பப்பாரு - இந்தப் பிள்ளையப் பத்திதான் கவலையே...''

''என்ன சார் பண்றது... பெத்ததுக்கு அப்புறம் பாசம் விடுமா... என்ன பாடு பட்டு வளர்த்தாங்களோ... எத்தனை பேர்கிட்ட, இவனாலே பேச்சு வாங்கி கட்டிட்டாங்களோ...''

சாமா, ஜன்னலருகில் கண்ணீர் வழிய நின்று கொண்டிருந்த காயத்ரியின் முதுகைத் தொட்டார்.

''அம்மாடி... இன்னும் எதுக்காக இங்கே நிக்கறே... நேத்து ராத்திரி நடந்தது வெறும் சொப்பனம்னு நினைச்சுக்கோ... பச்சைத் தண்ணியில குளுரா ஸ்நானம் பண்ணு... ஓடற தண்ணியில - உன் துக்கத்தையெல்லாம் கரைச்சுட்டு, புது மனுஷியா வா...''

காயத்ரி, அவர் சொன்னபடி செய்தாளென்றாலும், அந்த பிரமையிலிருந்து அவளால் விடுபடவே முடியவில்லை...

இதற்கிடையில், வாழ்வுக்கும், சாவுக்குமிடையே ஜீவ மரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த ராஜுவின் தாய் - யாருமே எதிர்பாராத விதமாய் பிழைத்து வீடு வந்து சேர்ந்தாள்...

பக்கத்து வீட்டில் - இருந்தாற்போலிருந்து அழுகை சத்தம் கேட்பதும், டாக்டர் - மனைவியை சமாதானப் படுத்துவதும் இங்கே கேட்கத்தான் செய்யும்.

இருந்தும் - சாமாவோ, சிற்சபேசனோ - அடுத்த வீட்டுக்குப் போய் துக்கம் விசாரிக்கவே இல்லை.

ஒரேயொரு முறை கீதா, காயத்ரியை அழைத்தாள்.

''அங்கிள்... காயத்ரியை எங்கே காணோம்...''

''அவளுக்கு உடம்பு சரியில்லே...''

''எங்க அம்மா பார்க்கணும்கறாங்க...''

''எதுக்கு?''

''ராஜு கிட்ட, காயத்ரிதானே கடைசியாபேசிஇருப்பா...அதான்... அவன்என்னசொன்னான்னு...''

சிற்சபேசன் இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று திகைத்து நிற்கும்போதே - சாமா, பொரிந்து கொட்டினார்.

''ஏம்மா... போறவன் போயிட்டான்... சும்மா, பழைய குப்பையையே எதுக்காக உங்க அம்மாவைக் கிளறச் சொல்றே... மனசை, வேற ஏதாவது விஷயங் கள்லே செலுத்தச் சொல்லு...''

''நான் சொன்னா கேட்கமாட்டேங்கறா அங்கிள். என்னதான் ஆயிரம் சமாதானம் சொன்னாலும், பறி கொடுத்த மனசு கேட்குமா?''

''யார்யாரோஎதையெதையோபறி கொடுக்க வேண்டியிருக்கும்மா இந்தப் பொல்லாத உலகத்துல... நம்மை விடவும் பரிதாபத்துக் குரியவங்கநிறையபேர்இருக்காங்க... அவங்களைப் பார்த்து, மனசைத் தேத்திக்கவேண்டியதுதான்...''

''அப்ப காயத்ரிய பார்க்க முடியாதா..?''

''அவனுக்கு மஞ்சக் காமாலை. இப்பநீவந்துபார்த்தியானா, உனக்கு ஒட்டிருக்கும். உன்னால, உங்க அம்மாவுக்குப் பரவும். ஏற்கனவே, ஹார்ட் பேஷண்ட் வேற. இதுமாதிரி தொத்து வியாதிங்க கிட்ட வரவே கூடாது... அதனாலத்தான் சொன்னேன்...''

உண்மையிலேயே இதா, காயத்ரிக்காக வருத்தப்பட்டுக் கொண்டேதான் சென்றாள்.

அப்பொழுதே - சாமா, சிற்சபேசனிடம் சொன்னார்தான்...

''இனிமே, இவ கல்யாணத்தை தள்ளிப் போடறது தப்புங்கானும்... 'மச மச'ன்னு வீட்டோட உட்கார்ந்திருக்காம, மாப்பிள்ளையத் தேட ஆரம்பிங்கோ...''

சிற்சபேசனும் தேடாமலில்லை... ராஜு இறந்த இரண்டாவது மாசமே, ஒரு டாக்டர் மாப்பிள்ளையின் ஜாதகத்தைக் கொண்டு வந்தார்.

பொருத்தம்பார்த்து, வரதட்சணை பேரம் பேசி, பெண் பார்க்க பிள்ளை வீட்டார் சாயந்திரம் வரப்போகிறார் களென்றால் - காலையில், காயத்ரி சாமாவிடம் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

''சாமா... எனக்கு தலைய சுத்தறது...''

''பித்தமாயிருக்கும். இஞ்சியை யும், தனியாவையும் அரைச்சு, வடிகட்டி, எலுமிச்சைசாறுல கலந்து தரேன். 'மடக்'குனு குடிச்சுடு. ஆனா இன்னிக்கு வேண்டாம். அப்புறம் மாப்பிள்ளைமுன்னாடி, இஞ்சிதின்ன எதுவோமாதிரிஉட்கார்ந்திருப்பே...''

''இல்லே சாமா... எனக்கு வாந்தி வரும் போல இருக்கு...''

''நேத்து என்னசாப்பிட்டே? உங்க அப்பாதான் - அரைப்படி வேர்கடலையத் தின்னுட்டு அமுக்குனு உட்கார்ந்திருக்கார்... வயித்தை அவருக்கு இல்லே



புரட்டணும். சும்மா புரட்டக் கூடாது... குடை ராட்டினம் மாதிரி புரட்டணும்... உனக்கேன் புரட்டறது..?''

சாமா, சிற்சபேசனிடம், ''நீர் எதையாவது வாங்கிக் கொடுத்தீரா... உமக்குத்தான், தெருவுல விற்கிற பண்டங்கள் மேல அல்ப ஆசை'' - என்று கத்த...

சிற்சபேசன், ''எத்தனையோ தடவை சொல்லியாச்சு. கட்ட எண்ணெய மறுபடியும் உபயோகப் படுத்தாதேயின்னு. நீ கேட்க றதில்லையின்னு வச்சிருக்கே... இப்ப, பொண்ணு பார்க்க வர்ற சமயத்துல தலை சுத்தல், வாந்திங்கறா... உன்னோட இதே ரோதனையாப் போச்சு...'' - இப்படி பதிலுக்கு எகிற...

சாமா, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு அடுத்த வீட்டுக்கு ஓடினார்...

பிள்ளையைப் பறி கொடுத்த துக்கத்தில் தாய் வேண்டுமானால் துக்கம் கொண்டாடிக் கொண்டு, மூலையில் சுருண்டு படுக்கலாம்... தந்தையால் அதெல்லாம் முடிகிற காரியமா...

அவர், தனது மருந்துப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்...

இரண்டு மாதத்தில் - இளைத்து ஆளே உருமாறி...

''என்ன சாமா சார்...?''

''காயத்ரிக்கு உடம்பு சரியில்லே...''

''இதா சொன்னா... ஜான்டிஸாமே...''

சாமா விழி பிதுங்கினார்...

எதற்கோ சொன்ன பொய் - இப்பொழுது இடிக்கிறதே...

''அ... அது வந்து... ஜான்டிஸ்தானா இல்லையான்னு எங்களுக்கே தெரியல்லே...''

''எந்த டாக்டர் பார்க்கறார்..?''

''டாக்டர் கிட்ட இதுவரைக்கும் காமிக்கலே... நானேதான் கை வைத்தியமா...''

''ஸ்டுபிட்!''

டாக்டர்எரிந்து விழுந்தார்.

''என்னய்யா பைத்தியக் காரத்தனமா இருக்கு... ரெண்டு மாசமாஉடம்புசரியில்லே...டாக்டர் கிட்ட காமிக்கலையாவது...''

அவர், மளமளவென, கைப் பையை எடுத்துக் கொண்டு, சிற்சபேசனின்வீட்டுக்குள்நுழைந்து, சோபாவில் சுருண்டு கிடக்கும் காயத்ரியின்நாடியைக்கவலையுடன் பிடித்துப் பார்த்தவர் - தேள் கொட்டினாற் போலத் துள்ளி நிமிர்ந்தார்...

''ஓய் சாமா...''

''என்ன சார்...''

''இவ அப்பா கிட்ட நான் பேசணும்...''

அவர் சிற்சபேசனிடம், பதட்டத் துடன் கேள்வி கேட்க, சிற்சபேசன் முகம் வெளிற... அப்பொழுதுதான் சாமாவின் மண்டையிலும் விஷயம் உரைக்கிறது...

''ஐயய்யோ... ராமேஸ்வரம் போயும் சனீஸ்வரன் விடல்லையா... ஏம்மா காயத்ரீ... ரெண்டு மாசமா... நீ குளிக்கலைங்கறதை எங்ககிட்ட சொல்லக்கூடாதா...''

அவள், சோபாவின் மூலையில் ஒடுங்கி உட்கார்ந்தபடி, பரக்கப் பரக்க விழிக்கிறாள்...

''இப்ப அதனால என்ன சாமா... என்னமோ ரெண்டு மாசமா எதுவுமில்லையேன்னு நினைச்சுட்டேன்... இப்ப டாக்டர் என்னன்னு சொல்றாரு...''

இந்தக் குழந்தையிடம் போய் எதைச் சொல்வார் சாமா... தேகம் குலுங்க, டாக்டரும் சிற்சபேசனும் நின்று கொண்டிருந்த இடத்துக்குத் தான் ஓடினார்.

''என்ன சார்... தாயில்லாப் பொண்ணுன்னா கண்டிக்கறது கிடையாதா? கண்டவன்கூட சுத்தவிட்டு... என்னாலேயே நம்ப முடியலையே... காயத்ரியா இது மாதிரி ஒரு காரியத்தை செஞ்சா...''

இதற்கு மேலும் சிற்சபேசனால் தாங்க முடியவில்லை.

''டாக்டர்... தாயில்லாப் பொண்ணை, எப்படி காப்பாத்தறதுன்னு தெரியாதகபோதி - என்னை என்ன வேணுமானாலும் சொல்லுங்க... ஏத்துக்கறேன்... ஆனா, என் குழந்தை மேல எந்தப் பழியையும் போடாதீங்க... அது ஒரு அப்பாவி. இப்பக் கூட அதுக்கு, தனக்கு என்ன நேர்ந்திருக்குன்னே தெரியாது...''

''எப்படிய்யா தெரியாது... எவனோ ஒருத்தன்கிட்ட சம்பந்தம் வச்சுக்காம... வயித்துல ரெண்டு மாசக் கரு எப்படி... சரி, சரி... எனக்கெதுக்கு இந்த விவகாரமெல்லாம்... முதல்லே, அவளை ஒரு லேடி டாக்டர்கிட்ட அழைச்சிட்டுப் போங்க. ரெண்டாவது - குழந்தைக்கு தகப்பன் யாரோ, அவனைக் கையும் மெய்யுமா தேடிப் பிடிச்சு, கல்யாணத்தைப் பண்ணி வையுங்க...''

இப்பொழுது சாமா, குறுக்கிட்டார்.

''நீங்க சொன்ன முதல் யோசனைய எங்களாலே ஏத்துக்க முடியும் டாக்டர். ரெண்டாவது யோசனையத் தான் ஒத்துக்க முடியல்லே...''

''ஏன்... ஏற்கனவே கல்யாணமானவனா... ராஸ்கல்... இவனுங்களை எல்லாம் கட்டி வச்சு உதைக்கணும்...''

''நான்கூட, உதைக்கத் தயாராத்தான் இருக்கேன்... ஆனா, அவன் அசகாய சூரன் ஓய்... இந்த உலகத்தை விட்டே ஓடிப் போயிட்டான்... அவனை எரிச்சு, சாம்பலாக்கி, காவேரியிலக் கரைச்சாச்சு... இதை எப்படிக் கரைக்கறது... இனிமேல்தான் யோசிக்கணும்...''

டாக்டர், சாமாவையே வெறித்தார்...

சாமா, சிற்சபேசனிடம் துக்கம் பொங்க கூறினார்.

''வரப் போற பிள்ளை வீட்டுக்காராளுக்கு சகுனம் சரியில்லையின்னு சொல்லி அனுப்பும்... இந்த மனுஷர் கிட்ட, காயத்ரி வயத்துல வளர்றதை எப்படி கலைக்கலாம்னு கேளும்... பரவாயில்லே... அவருக்கும் இதுல சமபங்கு பாத்தியதை உண்டு இல்லையா... ஒவ்வொரு தாத்தாவும், பொறக்கப் போற பேரக் குழந்தைக்கு என்ன பேரை வைக்கலாம்னு சிண்டைப் பிய்ச்சுப்பாங்க... நீங்க ரெண்டு பேரும் - உங்க பேரைக் காப்பாத்திக்க, பேரக் குழந்தைய எப்படி 'டாட்டா' காமிச்சு அனுப்பலாம்னு...''

''சாமா!''

டாக்டர் அதட்டினார்.

''என் பிள்ளை அயோக்யன்தான். ஒத்துக்கறேன். ஆனா, இது அவன் செஞ்ச அக்கிரமம்தான்கறதுக்கு என்ன சாட்சி...''

சாமா, வானத்தை உயர்த்தி கையைக்காட்டினார்...

''குற்றவாளிக்கு - இந்த உலகத்துல இருக்கற நீதிபதிகளுக்கெல்லாம் பெரிய நீதிபதியான சாட்சாத் ஈஸ்வரனே தண்டனை கொடுத்துட்டார் ஓய்... இனிமே சாட்சியத் தேடி என்ன லாபம்... நடந்தது இதுதான்... இதை அன்னிக்கே சொல்லியிருக்கணும். சமய சந்தர்ப்பம் ஒத்து வரல்லே. ஏற்கனவே நொந்து போயிருக்கற உங்ககிட்ட, இதை வேற சொல்லி அவஸ்தைக்குள்ளாக்க வேண்டாம்னு பார்த்தோம்... இப்ப சொல்ல வேண்டிய நிர்பந்தம் வந்துடுத்து.''

''ஐயோ... இதை என் பெண்டாட்டி எப்படி தாங்குவா...''

டாக்டர் அதிர்ச்சியில் முனக - சாமா அவரையும் ஒரு போடு போட்டு அதட்டினார்.

''யோவ்:.. உம்மகிட்ட சொன்னது, ஊர் பூரா தண்டோரா அடிக்க இல்லே... முதல்லே, இவளுக்கு ஏதாவது வழி பண்ண முடியுமான்னு பாரும்...''

டாக்டர், தன்னை சுதாரித்துக் கொண்டு தனக்கு மிகவும் வேண்டிய லேடி டாக்டர் ஒருத்தியை அழைத்து வர...

அவள், காயத்ரியைப் பரிசோதித்து விட்டு, கையை விரித்தாள்.

''ரொம்ப சின்னப் பொண்ணு... கரு உறுதியா இருக்கு... இத்தனை நாளுக்கு மேல அபார்ஷன் பண்ணினா பெரிய உசிருக்கே ஆபத்தாயிடும்...''

''ஐயோ... அப்ப வேற என்ன வழி...''

''பெத்துக்கறதைத் தவிர வேற வழியில்லே...''

சிற்சபேசன் தலையிலடித்துக் கொண்டு அழ, ராஜுவின் தந்தை - ஒரு தீர்மானத்துக்கு வந்தவராய் சொன்னார்:

''இங்கே பாருங்க... சாமாவோட, காயத்ரிய நான் சொல்ற ஊருக்கு அனுப்புங்க... குழந்தையப் பெத்ததும், அவ கண்ணுலேயே காட்டாம, அநாதை ஆசிரமத்துல

சேர்த்துடறது எங்க பொறுப்பு... காயத்ரி, வயித்துல பிள்ளைய சுமந்த வடு கூட இல்லாம செய்ய - என்னால முடியும்... அதுக்கு சிலநாட்டு மருந்து இருக்கு...''

அன்று ஒன்றுமே புரியாமல், சாமாவுடன் - எர்ணாகுளம் சென்றவள்தான் காயத்ரி...

பிள்ளை பெற்று ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் திரும்பி வந்தாள்...

பெண் குழந்தை என்பதையே சாமா சொல்லித்தான் தெரிந்து கொண்டாள்.

அவள், அதை மறக்க விரும்பினாள்...

பெற்றவரும், சாமாவும், டாக்டருமாய் - அதை மறைக்க விரும்பினார்கள்...

எர்ணாகுளத்திலேயே ஏதாவது விடுதியில் விடக்கூடாதோ?

நெருப்பை, புடவைத்தலைப்பால் மூடினாற்போல திருச்சியில் பொன் மலையிலேயே உள்ள அநாதை விடுதியிலா விட வேண்டும்?

சாமா அப்படித்தான் செய்தார்.

டாக்டர்கூட ஆட்சேபித்தார்...

''பக்கத்துல இருந்தா பாசம் வளரும் சாமா...''

''சரிதான் ஓய்... உம்ம பையன் இப்ப சொர்க்கத்துல இருக்கான்... பாசம் காத்துல கரைஞ்சாப் போயிடுத்து? இங்கேயே இருக்கட்டும்... ஆனா, பெரியவருக்கு தெரிய வேண்டாம். நான், அப்பப்போ வந்து பார்த்துக்கறேன்...''

இப்படித்தான் தொடர்ந்தது...

சசி வளர்ந்தாள்...

ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை, குழந்தையைப் பார்க்க சாமா கிளம்பி விடுவார்.

விடுதியில் - தன்னை - அந்தக் குழந்தைக்குக் காப்பாளராகக் கொடுத்ததும் அவர்தான்.

''பாவம்... யார் பெத்த பொண்ணோ... எனக்கு ஒரு பேத்தி இருந்தா நான் செய்ய மாட்டேனா... நான் சமையற்காரன்தான்... ஆனா சர்வீஸ் மைண்ட்... ஏதோ, என்னால ஆனதைக் குழந்தைக்குத் தர்றேன்...''

''அன்பைக் கொடுங்க சார்... அது போதும்...''

இது விடுதி தலைவி...

குழந்தை, சாமாவிடம் உயிரையே வைத்துவிட்டது.

தாத்தா, தாத்தா என்று உருகியது...

ஒருமுறை, அவள் பங்கெடுக்கும் விடுதி ஆண்டு - விழாவுக்கான அழைப்பிதழ் - தபாலில் வந்தபோது, சிற்சபேசன் வாங்கினார்... காயத்ரி, ஆவலுடன் எட்டிப் பார்த்தாள்...

இதற்கு ஒரு வாரத்துக்கு முன்புதான் பாலாஜியின் குடும்பம், சிதம்மாவின் தொணதொணப்பு தாளாமல் காயத்ரியை வந்து பார்த்துவிட்டு சம்பந்தம் பேசிவிட்டுப் போயிருந்தார்கள்.

அன்று, நாள் நன்றாக இருப்பதால் புடவைக் கடைக்கு கிளம்பிக் கொண்டிருந்த நேரத்தில் - இந்த அழைப்பிதழ்...






பாபுராவுக்கு தலைகால் புரியவில்லை... ஏன் - தங்கை ஜெயலட்சுமிக்கு வேலை போனது கூட பெரிதாகப்படவில்லை...

அவன் - அந்த விடுதியின் வராந்தாவில் - இரு வயதான கிழங்கள் - ஒரு சிறுமியின் வயசுக்கு தகுந்தாற்போல, குதித்து, கும்மாளம் போடுவதை இமைக்காமல் பார்க்கிறான்.

அதில் ஒரு கிழவரை, அவனுக்கு நன்றாகவே தெரியும்...

''பாலாஜியோட மாமனார் இல்லே அது?''

அவன், தங்கையைக் கேட்க, அவள் விழிக்கிறாள்.

''எந்த பாலாஜி... அவர் திருச்சியில இருக்கார். சிற்சபேசன்னு பேரு...''

''அவரேதான்... அவரேதான்...''

''கூட இருக்கறது - அவர் வீட்டு சமையற்காரர்... சாமான்னு பேரு... சிற்சபேசனை விட, இந்த ஹாஸ்டல்லே சாமா ரொம்பப் பிரசித்தம்...''

''அந்தக் குழந்தை...''

''இங்கே வளர்ற அனாதைக் குழந்தை... இது மாதிரி குழந்தைங்க வளர்ந்து ஆளாகி, தங்களுக்குன்னு ஒரு பாதைய தேடிக்கற மட்டும் - சில பெரிய மனுஷங்க, அவங்களுக்கான செலவை ஏத்துப்பாங்க... அது மாதிரி - சசிங்கற இந்தக் குழந்தைக்கு கார்டியன் சாமா... ஒவ்வொரு ஞாயிற்றுகிழமையும் இவளைப் பார்க்க வந்துடுவாரு... இப்ப சமீப காலமா, சிற்சபேசனும் வராரு... ரெண்டு பேருக்குமே, இவகிட்ட உசிரு...''

''எங்கேயோ உதைக்கலே?''

பாபுராவ், தங்கையைப் பார்த்து, கண்களைச் சிமிட்டுகிறான்.

''சமையல் செஞ்சு, அதுல கிடைக்கற சம்பாத்தியத்துல அவர், இந்தக் குழந்தைக்காக செலவு செய்யறார்னா அது ரொம்ப ஆச்சர்யம்...''

''பிள்ளை இல்லாத குறை...''

''பிள்ளை இல்லாத குறையின்னா - இந்த ஆசிரமத்துல வேற எத்தனைக் குழந்தைங்க வளருது... அதுலே ஒண்ணை எடுத்து வளர்க்க வேண்டியதுதானே... அசல், அச்சு - மூக்கும் முழியும்... அதப்பாரு, அதப்பாரு... தலைய சாய்ச்சு,

முகவாய்லே கைய வச்சிட்டுப் பார்க்கறது வரைக்கும் அப்படியே காயத்ரிய மாதிரி இருக்கற குழந்தையத்தான் தத்து எடுத்துக்கணுமா?''

ஜெயலட்சுமி, கண்களை அகல விரிக்கிறாள்.

''அந்த காயத்ரி, சசி மாதிரிதான் இருப்பாளா...''

''மாதிரியாவது... அவளோட சின்னப் பதிப்புதான் இவ... அது எப்படி... காயத்ரி, அவங்க அப்பாவுக்கு ஒரே பொண்ணு...''

பாபுராவ் மூளையைக் கசக்கிக் கொள்கிறான்.

''ஏன் ஜெயா... சசிய இங்கே சேர்த்தது யாரு...''

''ஒரு ஓமியோபதி டாக்டர்... அவர்கூட, இந்த ஆசிரமத்துக்கு - செத்துப்போன, தன்பிள்ளைநினைவா வருஷாவருஷம்ஒருபெரிய தொகைய தர்றார்...''

''ஓ... அவர் அட்ரஸ் என்ன...''

''முன்னாலே இங்கேதான் இருந்தார்... இப்பத்தான் எர்ணாகுளத்துல போய் செட்டிலாயிட்டாரு...''

பாபுராவுக்கு ஏற்கனவே குயுக்தியான புத்தி. இதற்கு மேலும் அவனால் சும்மாயிருக்க முடியவில்லை. நேரே - சிற்சபேசனின் எதிரில் போய் நின்றான்.

''நமஸ்காரம்... சௌக்கியமா...''

''நீங்க...''

''சாருக்கு என்னைத் தெரிஞ்சிருக்க நியாயமில்லே... எனக்கு எர்ணாகுளம்... டாக்டரோட இங்கே வர்றப்ப உங்களைப் பார்த்திருக்கேன்...''

''அட... அப்படியா... டாக்டர் எப்படியிருக்கார்... அவர் ஒய்ஃப் சௌக்கியமா...''

''ஆகா... அடிக்கடி உங்களைப் பத்தி சொல்லுவார்...''

''அத்தனைதூரம் சொல்றவர், எங்க பொண்ணு கல்யாணத்துக்கு பத்திரிக்கை அனுப்பிக்கூட வரவே இல்லே... பார்த்தா சொல்லுங்க...''

- இது சாமா...

''அப்படியா... நான் கண்டிப்பா சொல்றேன்... ஒருவேளைபத்திரிக்கை கிடைக்கலையோஎன்னமோ?''

''அது எப்படி கிடைக்காமப் போகும்? எங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்டுலதானே குடியிருந்தார்... அவருக்கு வர்ற லெட்டர்ஸ் எல்லாத்தையும் என் கையாலே ரீடைரக்ட் பண்ணியிருக்கேன்... அதெல்லாம் கிடைச்சிருக்கு... இதுதான் கிடைக்கலையாக்கும்...''

சாமா, படபடவெனப் பொரிய, பாபுராவ் புன்னகை மாறாமல் கேட்டுக்கொள்கிறான்...

இதுபோதும் அவனுக்கு...

ஜெயலட்சுமியின் சினேகிதியிடம் சொல்லி, ஆசிரம ஃபைலிலிருந்து, டாக்டரின் எர்ணாகுள விலாசத்தை அறிந்து கொண்டு திருச்சியிலிருந்தே - டிரங்கால் போட்டுப் பேசுகிறான்...

''சார்... நான் பொன்மலை ஆசிரம ஆபீஸிலேயிருந்து பேசறேன்...''

''சொல்லுங்க...''

''இங்கே சசிகலான்னு ஒரு குழந்தையை, நீங்க கொண்டு வந்து கொடுத்தீங்க இல்லையா...''

''ஆமா... குழந்தைக்கென்ன... உடம்புக்கு ஒண்ணுமில்லையே...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க... அந்தக் குழந்தைக்கு அப்பா, அம்மா கிடையாதுன்னு நீங்க, ரிஜிஸ்தர் பண்ணறப்ப சொல்லியிருக்கீங்க... ஆனா, இப்ப நாங்கதான் சசியோட பேரண்ட்ஸ்னு சொல்லிட்டு ரெண்டு பேர் வந்திருக்காங்க... உங்க அனுமதி இல்லாம, எப்படி...''

''நோ... நிஜமாவே குழந்தைக்கு அப்பா, அம்மா கிடையாது... யாரையும் நம்பி பிள்ளைய ஒப்படைக்காதீங்க... ஏன், சாமா வந்து கவனிச்சுக்கறார் இல்லே?''

''வர்றார் சார்... அவர்தான் அவங்களை அழைச்சிட்டு வந்திருக்கார்... குழந்தையோட சொந்தக்காரங்க இவங்கதான்னு சொல்றாங்க சார்...''

''......''

ஒரு வினாடி, அங்கு கனத்த மௌனம் நிலவுகிறது.

பாபுராவ் விடவில்லை. எறிகிற கல்லை எறிந்து பார்த்து விடலாம் என்கிற தீர்மானம்...

''யார் வந்திருக்கறது... காயத்ரியா..?''

பாபுராவ் அதிர்ச்சியில் தத்தளித்தவாறே சொல்கிறான்:

''ஆமா சார்... அந்த அம்மா பேர் அப்படித்தான் சொல்றாங்க...''

''கூட வந்திருக்கறது அவ புருஷனா...''

''ஆமாங்க. பாலாஜின்னு சொல்றாங்க...''

''அந்தப் புண்ணியவானைக் கூப்பிடுப்பா... நான் ஆசிர்வாதம் பண்ணனும். இந்த உலகத்துல புருஷன் பெத்த குழந்தைய, தன் குழந்தையாநினைக்கறோட்டறபெண் ஜென்மம் எத்தனையோ இருக்கு... ஆனா... பெண்டாட்டி குழந்தைய, தன் குழந்தையா நினைக்கற உத்தமனை இப்பத்தான், முதல் தடவையா நான் -''

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்படும் சத்தம் கேட்டு, டாக்டர் பதறுகிறார்...

''ஹலோ... ஹலோ...''

ஊம்ஹூம்... எதிர்முனையில் மூச்சுபேச்சில்லை...

பாபுராவ்தான் கொப்புளிக்கும் உற்சாகத்தை அடக்கும் வழி தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறானே...

அன்றிரவே சென்னை திரும்பிவிட்டான்...

அதேபோல - தன்னுடன் பேசியது யார் என்றே தெரியாத டாக்டர் - ஏதோ தவறு நடந்துவிட்டது என்கிற உள்ளுணர்வின் உந்துதலோடு - அலறிப்புடைத்துக் கொண்டு திருச்சி வருகிறார்...

சிற்சபேசன் வீட்டில், விழுகம்

அமைத்து யுத்தம் நடத்தாதது ஒன்றுதான்குறை...

''ஆசிரமத்துலேயிருந்து ஆள் பேசறான்னா, உடனே நெல்லிக்கா மூட்டைய அவிழ்த்துக் கொட்டற மாதிரி, எல்லாத்தையும் கொட்டிடணுமா..? டாக்டருக்குப் படிச்சா - உடம்பு ஒண்ணைத்தான் கவனிக்கத் தெரியுமா... மூளைன்னு ஒண்ணு இருக்கே... அதை உபயோகப்படுத்தவே தெரியாதா?''

''உங்களையார்சார் - எர்ணாகுளம் டாக்டரைத் தெரியும்னு அந்த ஆள் சொன்னவுடனே - என் ஹிஸ்டரியச் சொல்லச்சொன்னது...''

''அந்த ஆளை உங்க கூடப் படிச்சுத்த மாதிரி இருந்தது... சொன்னேன்...''

இந்த சண்டைக்கு ஒரு முடிவே இல்லாமல் போனபோதுதான் சாமா கத்துகிறார்...

''கொஞ்சம் இருங்கோ... நான் ஆசிரமத்துக்கு போய் அந்த மனுஷன் யாரு... ஆசிரமத்துக்கும் அவனுக்கும் என்ன தொடர்புன்னு விசாரிச்சுண்டு வந்துடறேன்... அப்படியே காயத்ரியையும் பாலாஜியையும் உடனே புறப்பட்டு வரும்படி ஒரு தந்தி...''

''அவங்க என்னத்துக்கு...''

''இருக்கட்டும்... வேற எவன் மூலமாவோ - விஷயம் அம்பலமாறதை விட, நம்ம வாயாலேயே சொல்லிடறது உத்தமம் இல்லையா...''

''ஐயோ... இதைக் கேட்டதுக்குப் பிறகும், என் மாப்பிள்ளை, காயத்ரிய தன்னோட வச்சுப்பான்னு நினைக்கறீங்களா...''

சிற்சபேசன் குழந்தை மாதிரி கேவுகிறார்.

டாக்டரோ - செய்வதறியாமல் திகைத்துப் போய் உட்கார்ந்துவிட்டார்...

சாமாதான் பரபரப்புடன் செயல்படுகிறார்.

''அந்த மனுஷன் பேரு பாபுராவாம்... அவன் தங்கை ஆசிரமத்துல வேலை செஞ்சிட்டிருந்தாளாம்... பாபுராவ், பாலாஜியோட ஆபீஸ்லேதான் வேலை செய்யறான்...''

இந்த வார்த்தைகளினால் உடைந்தே போய்விட்டார் சிற்சபேசன்...

சாமா கூட, செய்வதறியாமல், தனக்கு வரும் கோபத்தை யாரிடம் காட்டுவது என்றே புரியாமல் சிற்சபேசனிடமே எரிந்து விழுகிறார்.

''எத்தனையோ தடவை முட்டிட்டிருக்கேன்... குழந்தையப் பார்த்துட்டு வர, நான் மட்டும் போயிட்டு வர்றேன்... நீர் வரவேண்டாம்னு... கேட்டேளா... பச்சைக் குழந்தை மாதிரி - சரியப் பார்க்க நானும் வர்றேன், நானும் வர்றேன்னு அடம் பிடிச்சுண்டு வருவீர்... இப்ப அவஸ்த்தைப்படும்...''

''நான் வந்து பார்த்ததாலேயா - இப்படியொரு இக்கட்டு வந்திருக்கு...''

''பின்னே... ஏதோ நான் போனா சமையல்காரன்... லட்சத்துல ஒருத்தன். எவனுக்கும் என்னை அடையாளம் தெரியாது. நீர் அப்படியா... சில்க் ஜிப்பாவும், ஜரிகை அங்கவஸ்திரமுமே எட்டு ஊருக்குக் கட்டியம் கூறுமே...''

இத்தனைக்கும் நடுவில் டாக்டர்...

''இதையெல்லாம் யோசிச்சுதான் நான், குழந்தைய தூர தேசத்துல ஏதாவது ஒரு ஆசிரமத்துல கொண்டுவிடலாம்னு சொன்னேன்... நீங்க கேட்கலை... காயத்ரியோட கல்யாணத்துக்கே நான் வராததுக்கு காரணம் இதுதான் - நான் வந்தா - எல்லாருக்கும் பழசெல்லாம் நினைப்புக்கு வரும்... நல்ல நேரத்துல அநாவசிய மனக்கலக்கம்...''

இவர்கள் இங்கே புழுவாய் துடித்துக்கொண்டிருக்கையிலேயே - காயத்ரியும், பாலாஜியும் - தந்தியைப் பார்த்துவிட்டு - குழந்தைகளுடன் ரயிலேறிவிட்டார்கள்...

''உங்க அப்பாவுக்கு உடம்பு சரியில்லையா... என்ன விஷயம்னு ஒரு வார்த்தையாவது அந்த தந்தியில சேர்த்திருக்க மாட்டாரோ இந்த சாமா... தன் பேரை போட்டுக்கறதுக்கு மட்டும் நல்லாத் தெரியறது...''

பாலாஜி, புலம்பிக் கொண்டே வருகிறான்...




''ஐயோ, ஐயோ... அம்மா, இங்கே ஓடி வந்து பாபுராவ் சொல்றதைக் கேளேன்... அப்பா பாவம் மானஸ்தர்... இந்த விஷயத்தைக் கேட்டா, நூக்கு போட்டுட்டு செத்திருப்பார்...''

கருணா, தாய்க்காக குரல் கொடுத்தபோது தன் வயசையும் மறந்து முதலில் வெளியே வந்தவள் சீதம்மாதான்.

பாபுராவ் சொன்னவற்றை சீதம்மாவும் கேட்டுக் கொண்டுதானிருந்தாள்.

முதலில் அவளுக்குப் பெரிய அதிர்ச்சிதானென்றாலும் உடனடியாக இது, பாலாஜியின் தந்தையின் காதுபடவோ, தன் பெண்ணின் காதுபடவோ கேட்டு,

பெரிய அமர்க்களமாவதற்கு முன் ஏதாவது செய்ய வேண்டுமெனத் துடிக்கிறாள்.

எப்பொழுது பாபுராவ் விஷயத்தைக் கடை பரப்ப ஆரம்பித்துவிட்டானோ - இனி இது ஓயப்போவதில்லை...

'அதற்கு முன் ஏதாவது செய்தாக வேண்டும்.'

'ஏதாவது...'

அவள் நேரே, கருணாவின் முன் போய் நின்றாள்.

''என்ன கருணா, அநாதை ஆசிரமத்துல, காயத்ரி சாயல்லே ஒரு குழந்தை வளருதுன்னா - உடனே, இதுமாதிரியான வக்கிரமான முறையிலதான் உங்க மூளை செயல்படணுமா...''

''இதப்பாரு பாட்டி... விஷயம் எப்ப இந்த அளவுக்கு வந்தாச்சோ, இனிமே மூடி மறைக்கப்பார்க்காதே... உனக்குப் பேரன் பெண்டாட்டி ஒசத்தியாக இருக்கலாம்... ஆனா, அதுக்காக அக்கிரமங்களை எல்லாம் நியாயப்படுத்தக்கூடாது...''

''அக்கிரமம்னு சொல்லலே... இதைப்பத்தி, காயத்ரி ஏற்கனவே என்கிட்ட சொல்லியிருக்கா...''

''என்னன்னு...''

''அவங்க அப்பாவுக்கு, அந்த ஊருல ஒரு பொம்பிளை சினேகம் இருந்ததையும், அவளுக்குப் பொறந்த குழந்தைய அநாதை ஆஸ்ரமத்துல விட்டிருக்கறதாகவும்... ஒருதடவை ஏதோ ஆண்டு விழாவுல - அது பிரமாதமா நடிச்சதாம்... எல்லாரும் பாராட்டினப்ப, அதுக்கு அம்மா இருந்து பார்க்கலையேங்கற ஏக்கத்துல காய்ச்சலே வந்துடுச்சாம்... என்ன பண்ணறது... பெத்தவ, எப்பவோ கண்ணை மூடிட்டா. திடுதிப்புனு ஒரு அம்மாவுக்கு எங்கே போறது... அதனாலே - காயத்ரியே அதுகிட்ட, தான்தான் அதும் அம்மான்னு பொய் சொல்லியிருக்கா...''

கருணா நம்ப முடியாதவளாய் பார்க்கிறாள். இதற்குள் பார்வதி வரையில் விஷயம் போய் - அவளும் கூடத்தின் நடுவே லங்கிணி போல வந்து நிற்கிறாள்.

''நீ என்னதான் சொன்னாலும் என்னால ஒத்துக்க முடியலேம்மா... காயத்ரிக்கு பொறந்த குழந்தை இல்லையின்னா - அந்த டாக்டர் ஏன், அப்படியொரு வார்த்தைய சொல்லணும்?''

''அதானே... நல்லாக் கேளுங்க...''

- இது பாபுராவ்.

சீதம்மா எரிச்சலுடன் அவனைப் பார்க்கிறாள்.

''காயத்ரிக்கு தன் தங்கையக் கொண்டு வந்து தன் கூடவே வச்சுக்கணும்னு ஆசை. புருஷன் ஒத்துப்பான். நவக்ரகம் மாதிரி இந்த வீட்டுல இருக்கற மத்தவங்கஎல்லாம் ஒத்துப்பாங்களோ, மாட்டாங்களோங்கற கவலை... இதை அடிக்கடி அந்த டாக்டர் கிட்ட சொல்லியிருக்கா... அதைத்தான் அவர், அப்படி சொல்லியிருக்கார்... போறுமா... கடைசியா ஒண்ணு சொல்றேன்... கேட்டுக்க... ஆயிரம்தான் இருந்தாலும் அவ, எங்க குடும்பத்தை சேர்ந்தவ. அவ எந்த அளவுக்கு தூய்மையானவங்கறதைப் பத்தி எனக்குத்தான் தெரியும். தயவு செஞ்சு, நீ வெளியில போறியா?''

இந்த நேரடித் தாக்குதலை, அவன் எதிர்பார்க்கவில்லை...

மெதுவாக எழுந்துவிட்டான்...

சீதம்மா, அதோடு நிற்கவில்லை... நேரே, பாலாஜிக்கு ஒரு டிரங்கால் போடும்படி, கருணாவிடம் சொல்கிறாள்.

''எதுக்கு?''

''நான் அவன்கூடப் பேசணும்...''

பார்வதி, கடுப்புடன் சொல்கிறாள்...

''இனிமே நாங்க யாருமே, அவ கூடப் பேசறதா இல்லே... எப்ப இத்தனைப் பெரிய விஷயத்தை மறைச்சாளோ... எனக்கென்னமோ, அந்தக் குழந்தை, அவளோடதாத்தான் இருக்கும்னு தோணறது. த்தூ! மானம் கெட்ட ஜென்மம். இவ மயக்கமும் மிரட்சியும் எதனாலன்னு இப்ப இல்லே தெரியறது...''

சீதம்மா, மகளின் தோளைத் தட்டுகிறாள்.

''இத்தனைப் பேசறியே... உங்க அப்பா யாருன்னு உனக்குத் தெரியுமா? எனக்கு கல்யாணமான எட்டாவது மாசம் எனக்கு நீ பொறந்தே... என் கழுத்துல தாலி கட்டினவரைத்தான் உன்னோட அப்பான்னு நான் உனக்கு அறிமுகப்படுத்தினேன்... என்ன பண்றது... ஏதோ ஒரு கல்யாண சத்திரத்துல எனக்கு, அப்படியொரு அசம்பாவிதம் நேர்ந்துடுச்சு...''

''அம்மா!''

பார்வதி அதிர்கிறாள்.

''ஒரு பொண்ணோட குணத்தைதான் நாம பார்க்கணுமே தவிர - இப்படியெல்லாம் ஆராயக்கூடாது...''

''......''

''அன்னிக்கு நான் செஞ்ச தப்பை, தம்பட்டம் அடிச்சிட்டிருந்தா, இன்னிக்கு உனக்கு கல்யாணமாகி, பிள்ளை, குட்டி பெத்து குடும்பம் நடத்தறது எப்படி...''

''இதையெல்லாம் கேட்டா எனக்கு நாக்கைப் பிடுங்கிட்டு சாகணும் போல இருக்கு...''

கருணா வெடுவெடுக்கிறாள்.

''உன்னால முடிஞ்சா, அதையும்தான் செய். யார் வேண்டாம்கறாங்க... உன்னே நடந்த தில்லுமுல்லுங்க வெளில தெரிஞ்சா அவமானமாச்சேன்னு அத்தனை துக்கத்தையும் மூடி மறைச்சேனில்லே... அதுக்கு

பதில்தான் - இன்று நீ, கால் மேல கால் போட்டு உட்கார்ந்துட்டு பேசறே...'

கருணா இதற்கு மேல் பேசவில்லை...

பார்வதியும்தான்...

டிரங்க்காலில் பாலாஜியின் குரல் கேட்டவுடனேயே, அத்தனை நேரமும் அடக்கி வைத்திருந்த துக்கம் வெள்ளமாய் பெருக அழுகிறாள் சீதம்மா...

''என்னடா பாலாஜி?''

''யாரு பாட்டியா...?''

''ஆமா...''

''இங்கே ஒரு சின்ன தப்பு நடந்து போச்சு பாட்டி... இத்தனை நேரம் - பாபுராவ் அங்கே கொட்டி முழக்கியிருப்பானே...''

''ஆமா...''

''காயத்ரி அழறா... ஆனா அவ மேல தப்பே இல்லே... ஏதோ தற்செயலா நேர்ந்த விபத்து அது... இந்த சின்ன விஷயத்துக்காக, அவளைப் பிரிய எனக்கு மனசு வரல்லே... நீ என்ன சொல்றே?''

''நானும் அதையேதான்டா சொல்றேன்...''

''அங்கே, அம்மாவும் கருணாவும் காளி அவதாரம் எடுத்திருப்பாங்களே...''

''அதையெல்லாம் நான் பார்த்துக்கறேன்... நீ குழந்தையோட வா...''

''என்னது?''

''ஆமாடா... இனிமே சசி நம்ம வீட்டு மூத்த பேத்தி!''

**(முற்றும்)**

ஜீயே பப்ளிகேஷன்ஸுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (பிரஸ்)
வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன்.
முகவரி: 6, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி. அசோகன். தொலைபேசி: 28544294



# கெஸ்ட் ஹவுஸ்



ரஜினிகாந்தின் இளம் வயதில் நடந்த சம்பவங்கள் ஆச்சரியப் பட வைக்கிறது. ஆசிரியர் அறையில் கொடுத்துள்ள ஒரு வாக்காளனின் கடிதம் ஒவ்வொரு தொகுதி எம்.எல்.ஏவும் படித்து இருந்த வேண்டிய கருத்துக்கள். 'குடும்ப நாவல்' படிக்க படிக்க ஆவல்.

எஸ். சத்யா, தேவராயன் பேட்டை.

நெல்லைச் சீமையின் சரம் பேசும் 'அமர் சேவா சங்க'த்தின் செயல் பாடுகள், சாதனைகள் ஆகியவற்றை விரிவாகத் தந்து, திரு. இராமகிருஷ்ணன், திரு.சங்கரராமன் ஆகியோரின் சேவைச் சாதனையை கௌரவித்துவிட்டீர்கள்.

- மு. சிவராமன், மேலப்புதூர்.

'குடும்ப நாவல்' இப்போது குடும்பத்தில் உள்ள 6 வயதினர் முதல் 66 வயதினர் வரை படிக்கின்ற வண்ணம் 'பல்சுவை இதழாக' ஜொலிக்கிறது. எம்.எல்.ஏக்களுக்கு ஆசிரியர் எழுதிய கடிதம். உண்மைகளின் உலா. அப்பப்பா... ஏராளமான படைப்புகள்... எங்கள் இதயம் கவர்ந்த படைப்புகள். பாராட்டுக்கள்.

- என். சண்முகம், திருவண்ணாமலை.

'பாபநாசம் வாருங்கள்! புண்ணியத்தை சேருங்கள்!' பாபநாசம் குறள்பித்தன் எழுதிய சர்ப்ப விநாயகர் பற்றிய கட்டுரை வெகு அருமையாக இருந்தது. விநாயகர் சதுர்த்தி விழா பற்றிய செய்திகள் என்போன்ற விநாயகர் பக்தர்களுக்கு நல்விருந்தாய் அமைந்தது என்றால் அது மிகையாகாது.

- எம்.எஸ். சேகர், நீலிக்கோணாம்பாளையம்.

பொழுதுபோக்கிற்காக நாவல் மட்டும் அல்லாமல் எத்தனை அரிய தகவல்கள்! பயனுள்ள செய்திகள்! இலக்கியம், மருத்துவம், சமையல், அரசியல், சினிமா, குழந்தைகளுக்கு என்று குடும்பத்தில் உள்ள அனைத்து வயதினரும் படித்துப் பயன் அடையும் பல்சுவை இதழாகத் திகழ்கிறது. நன்றி! உங்களது இந்த முயற்சி எப்போதும் தொடரட்டும்...

- எஸ்.. பாலமுரளி கிருஷ்ணா, சிவகிரி.

'அன்புடன் கொஞ்சம் வம்பு' நாவல் படித்தேன். மிகவும் நன்றாக இருந்தது 'தேவிபாலா' என்றால் சும்மாவா? ஆசிரியர் அறையில் அசோகன் அவர்களின் நம்ம ஊர் எம்.எல்.ஏ. கடிதம் சூப்பர். எழுதிய அவருக்கு பெரிய துணிச்சல்தாங்க.

- எஸ். முத்தையா சுரேஷ், பட்டுக்கோட்டை.

**ரூ.50 பரிசு பெறும் வாசகர் கடிதம்**

ஏமாந்த மக்களிடம் ஓட்டை வாங்கிவிட்டு தொகுதிப் பக்கமே போகாமல் இருக்கும் எல்.எல்.ஏக்கள் இருப்பது உண்மை. அதே சமயம் மக்கள் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து மீண்டும் அவர்கள் மனதில் இடம் பிடித்து தொடர்ந்து பல வருடங்களாக பதவியில் இருப்பவர்கள் இருப்பதும் உண்மை. ஆகவே அரசியலில் நல்லவர்களும் உண்டு கெட்டவர்களும் உண்டு. ஆசிரியர் அறை கட்டுரை அரசியல்வாதிகளுக்கு எச்சரிக்கை.

- கே.எம். ஸ்வீட் முருகன், கரடிகொல்லப்பட்டி.